ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

2018

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2005-10-31 ஆம் திகதியிடப்பட்டதும் 1417/12 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் ஆக்கப்பட்ட கட்டளையின் கீழும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது தாபிக்கப்பட்டுள்ளது.

தொலைநோக்கு

இலங்கையில் ஆங்கிலமொழி கற்பதற்கும் அத்துடன் பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் சார்பில் தலைமை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவைகளுக்கும் போக்குகளுக்கும் அமைவாக படைப்புகளை ஆக்கும் திறனுள்ளவர்களாகவும் சூழ்நிலை சார்ந்தவர்களாகவும் முன்னுரிமையாளராக பிரபல்யமடைதல்.

செயற்பணி

சுயமாக கற்பதன் மூலம் ஆங்கிலமொழி மற்றும் இலக்கிய கல்வியில் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான கல்வி, ஆராய்ச்சி, ஆசிரியர் கல்வி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கற்றலில் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் உட்பட தேசிய மட்டத்தில் ஆங்கில மொழிக் கல்வியினை மேம்படுத்துவதும் அதற்கு தலைமைத்துவம் வழங்குதலும்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
திருத்தப்பட்ட ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2018

பொருளடக்கம்

		பக்க இலக்கம்
1.	**பணிப்பாளர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்க அறிமுகம்**	4
	(அ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உறுப்பினர்கள்	4
	(i) முகாமைத்துவ சபை	5
	(ii) இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	7
	(iii)இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	9
	(iv) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்	11
2.	**பணிப்பாளரின் மீளாய்வு**	12
	(அ) சுருக்க அறிமுகம்	12
	(ஆ) முக்கிய நிகழ்வுகள்	13
	(இ) சவால்கள்	17
	(ஈ) எதிர்கால திட்டங்கள்	18
3.	**முகாமைத்துவமும் நிருவாக முன்னேற்றமும்**	34
4.	**நிலைபேறுடைய அபிவிருத்திக்கான எதிர்கால எதிர்பார்ப்புகள் தொடர்பிலான அறிக்கை**	40
5.	**திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்று (புதிய படிவத்திற்கு அமைவாக)**	41
6.	**கணக்காய்வுக் குழுவின் அறிக்கை**	43
7.	**கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று**	44
8.	**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**	68
9.	**கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**	74

01. பணிப்பாளர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்க அறிமுகம்



(அ) (i) **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்**

	பெயர்	பதவிப் பெயர்
1.	கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
9.1.(ஆ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அல்லது இந்த விடயத்துக்குப் பொறுப்பான வேறு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கலாம்.		
2.	திருமதி ஆர்.பி.ஆர்.ரணசிங்க	உதவிப் பணிப்பாளர் (புலமைப்பரிசில்) - உயர்கல்வி அமைச்சு
3.	திரு.கே.ஆர்.உடுவாவெல	மேலதிக செயலாளர், (அரசசார்பற்ற உயர்கல்வி) நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு
9.1.(ஈ) பல்கலைக்கழக ஆங்கில கல்விப் பிரிவின் தலைவர்		
4.	கலாநிதி கே.ஆர்.எம். த சில்வா	தலைவர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9.2.(அ) பீடசபையின் பிரதிநிதி ஒருவர்		
5.	பேராசிரியர் என்.ஆர்.அர்த்தநாயக்க	ஓய்வுநிலை பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (2018 ஏப்ரல் மாதம் வரை)
	பேராசிரியர் லலித் மென்டிஸ்	பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்
9.2.(ஆ) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆங்கில மொழி பற்றிய பேராசிரியர்கள் ஐவர் அல்லது ஆங்கில மொழி கற்பிக்கும் மற்றும் மொழிக் கல்வி (ஏற்புடையதானவாறு) கற்பித்தல் பொறுப்பான கல்விப் பிரிவின் தலைவர்கள்		
6	பேராசிரியர் நிலுபர் த மெல்	ஆங்கிலமொழி பற்றிய தலைமை பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்
7.	கலாநிதி ஜே.மனதுங்க	சிவில் பொறியியல் கல்விப் பிரிவு, மொறட்டுவை பல்கலைக்கழகம்
8.	பேராசிரியர் நெலுக்க சில்வா	பேராசிரியர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
9.	பேராசிரியர் உமா குமாரசுவாமி	பணிப்பாளர் பால், சமஉரிமை மற்றும் சமத்துவத்திற்கான நிலையம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
10.	திரு.பி.ரணேபுர	முன்னாள் செயலாளர், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

9.2.(இ) பல்கலைக்கழக மூதவை சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்		
11.	கலாநிதி ஜே.சி.என்.ராஜேந்திர	தலைவர் / பௌதிக விஞ்ஞான பேராசிரியர், திறந்த பல்கலைக்கழகம் சருவதேச உறவுகள் பிரிவு (இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவை சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்)
9.2.(ஈ) கல்விப் பிரிவு அதன் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்		
12.	கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே	சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - உறுப்பினர், கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
13.	கலாநிதி எஸ்.எம்.ஹேரத்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் - உறுப்பினர், கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
9.2.(உ) தொழினுட்ப, கல்வி அல்லது நிருவாக துறைசார்பில் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர்களிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்		
14.	பேராசிரியர் டபிள்யு.ஐ.சிறிவீர	ஓய்வுநிலைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகம்
15.	கலாநிதி எல்.ஆர்.ஜயசேக்கர	சிரேட்ட விரிவுரையாளர் தாவரவியல் கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்) (2018 ஏப்ரல் மாதம் வரை)
	கலாநிதி உபாலி சேதர	போசகர், இலங்கை சருவதேச பௌத்த கல்வி நிறுவனம்
9.2.(ஊ) ஆசிரியர் கல்வியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு தேசிய கல்வி நிறுவனத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்		
16.	திருமதி வீ.டி.சி.பி.பெரேரா	பணிப்பாளர், வெளிநாட்டுவள முகாமைத்துவப் பிரிவு மற்றும் பணிப்பாளர், ஆங்கிலம் (கடமைகளை நிறைவேற்றும்) தேசிய கல்வி நிறுவனம்
பொது திறைசேரியின் பிரதிநிதி		
17.	கலாநிதி எம்.கே.சி.சேனாநாயக்க	பணிப்பாளர், அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், பொதுத் திறைசேரி

(ii) **இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

	பெயர்	பதவி
1.	கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(அ) தலைவராக பணிப்பாளர்		
2.	கலாநிதி டபிள்யு.செனவிரத்ன	நூலகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர்		
3.	திருமதி எச்.டி.விஜேசேக்கர	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
4.	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
5.	கலாநிதி எஸ்.எம்.ஹேரத்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள்		
6.	திருமதி எஸ்.எம்.நியங்கொட	மாணவப் பிரதிநிதி
7.	திருமதி என்.எச்.எல்.அபேசிங்க	மாணவப் பிரதிநிதி
12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் மூன்று மாணவர்கள்		
8..	திருமதி எல்.கே.குமாரணதுங்க	வெளிவாரி விரிவுரையாளர், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி பற்றிய முதுமாணி பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (உறுப்பினர்)
9.	திருமதி பி.நாகசுந்தரம்	வெளிவாரி விரிவுரையாளர், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி பற்றிய முதுமாணி பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (உறுப்பினர்)
10.	கலாநிதி ஆர்.ரசூல்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்		
11.	கலாநிதி டி.தேவேந்திர	சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

12.	திருமதி எஸ்.ஆர்.இலங்ககோன்	சிரேட்ட விரிவுரையாளர் ஆங்கிலமொழி கற்கைகள் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
13.	கலாநிதி கே.ஆர்.எம். த சில்வா	சிரேட்ட பேராசிரியர் / மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(உ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் மூவர்		

(iii) **இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

	பெயர்	பதவி
1.	கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(அ) தலைவராக பணிப்பாளர்		
2.	கலாநிதி டபிள்யு.செனவிரத்ன	நூலகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர்		
3.	திருமதி எச்.டி.விஜேசேக்கர	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
4..	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
5.	கலாநிதி எஸ்.எம்.ஹேரத்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள்		
6.	திருமதி டபிள்யு.எம்.ஜி.யு.விஜேயசுந்தர	மாணவப் பிரதிநிதி
7.	திருமதி ஜே. அபேகுணவர்தன	மாணவப் பிரதிநிதி
12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் இரண்டு மாணவர்கள்		
8.	கலாநிதி டி.தேவேந்திர	சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9.	கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே	சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்		
10.	பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க	ஆங்கிலமொழி சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
11.	கலாநிதி வி.வி.மெதவத்தேகெதர	சிரேட்ட விரிவுரையாளர், மொழி கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.	கலாநிதி ஜே.கெனடி	தலைவர், ஆங்கில மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

12.(1)(ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் மூவர்		
13.	கலாநிதி எஸ்.விஜேவர்தன	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
14.	கலாநிதி கே.வர்ணபால	சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம்
12.(1)(எ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்போந்த வகுப்பீடுகளின் கீழ் எடுக்கப்படாத ஆசிரியர்கள் மூவர்		

(iv) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்

நிரந்தர பதவியணி உறுப்பினர்களின் பெயர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
1	கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல PhD (ஹொங்கொங்)	பணிப்பாளர்
2	திருமதி எச்.டி.விஜேசேக்கர PhD (QUT, அவுஸ்திரேலியா)	சிரேட்ட விரிவுரையாளர்
3	கலாநிதி எஸ்.எம்.ஹேரத் PhD (டொரன்டோ, கனடா)	சிரேட்ட விரிவுரையாளர்
4	திருமதி எம்.ஐ.ஜான்ஸ் MA-TESL (ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	விரிவுரையாளர் (தகுதிகூர் காலம்)
5	திரு.டபிள்யு.டி.ரீ.திலகரத்ன BSc (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	சிரேட்ட உதவிப் பதிவாளர்
6	திருமதி.எஸ்.எம்.பி.ஏ.சுபானி BSc - Business Administration (ஸ்ரீ ஜயவர்தனபுர)	
7.	திருமதி.எஸ்.சி.முனசிங்க BSc - Business Administration (ஸ்ரீ ஜயவர்தனபுர)	உதவி நிதி பொறுப்பாளர்
8.	திருமதி.ஜி.பி.ஐ.டி.சிறிவர்தன	கணனி பிரயோக உதவியாளர்
9	திரு.எச்.என்.என். பெரேரா	கணனி பிரயோக உதவியாளர்
10	திருமதி டி.எம்.ரீ.பி.திசாநாயக்க BA (பேராதனை)	கணனி பிரயோக உதவியாளர்
11	திருமதி ஏ.ஆர்.எஸ்.கே.ராஜபக்ஷ	புத்தக பதியுநர்
12	திருமதி ஏ.ஜீ.ஆர்.எம்.டி.கே.ரணவீர	முகாமைத்துவ உதவியாளர்
13	திரு.டபிள்யு.எம்.டி.ஆர்.பீ.வீரசிங்க	தொழிலாளர்
14	திரு.ஆர்.யு.ஜயசிங்க	வேலைகள் உதவியாளர்

2. பணிப்பாளரின் மீளாய்வு

(அ) சுருக்க அறிமுகம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டம் என்பவற்றின் மூலம் தாபிக்கப்பட்ட ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இலங்கையில் ஆங்கிலமொழி கல்வி சார்பில் உள்ள ஒரே பட்டப்பின் படிப்பு நிறுவனமாவதோடு, அரசாங்கத்துறை முதல் தனியார்துறை, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி உட்பட பல்வேறுபட்ட முறைசாரா கற்பித்தல் பின்னணியைக் கொண்ட பரந்துபட்டதும் பல்வகைமைப்பட்டதுமான பின்னணியில் ஆங்கிலமொழி ஆசிரியல் உள்ளாக ஆங்கிலமொழி தேவையுடைய பல்வேறுபட்ட தொழில்சார்பாளர்களுக்கு உயர் தரம் மிக்க பட்டப்பின் படிப்பு மட்டத்தில் ஆங்கிலமொழி மற்றும் இலக்கிய கல்வியினை வழங்கும் முன்னுரிமை நிறுவனமாகவுள்ளது. இலங்கையில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்களினால் ஆங்கிலமொழி முதலீட்டுக்கான முன்னுரிமை துறையொன்றாக இனங்கண்டுள்ளதோடு, சேவையினை அடிப்படையாகக் கொண்ட அறிவினை உடைய பொருளாதாரத்தை நோக்கி இலங்கையினை கொண்டு செல்லும் தற்போதைய அரசாங்கத்தின் நோக்கத்திற்குள் இது முன்னுரிமை பெற்ற விடயமொன்றாகும். இத்தகைய பின்னணியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் செயலாற்றியுள்ள விதம் அதேபோன்று எதிர்காலத்தில் செயலாற்றும் விதம் மிக முக்கியமானதாகும். ஆங்கிலமொழி, இலக்கிய கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில்சார்பாளர்களுக்கு தர்க்க ரீதியானதும் நடைமுறைசார்ந்ததுமான அறிவினை மேம்படுத்துதல், தமது வேலைத்தளத்தில் ஆங்கிலமொழி தேவைப்படும் பல்வேறுபட்ட தொழில்சார்பாளர்களின் ஆங்கிலமொழி தொடர்பாடல் ஆற்றலை மேம்படுத்துதல், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான தீர்வுகளை வழங்கக்கூடிய விதத்தில் ஆங்கிலமொழி கற்பதற்கு தர்க்க ரீதியானதும் நடைமுறைசார்ந்ததுமான அறிவினை விருத்தி செய்தல், உள்நாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவிதத்திலும் கொள்கைகளை வகுக்கும் போதும் அறியச் செய்விக்கும் போதும் ஆங்கிலமொழி கல்வியின் உலக போக்குக்கு அமைவாக இருத்தல் என்பன இதன் செயற்பாடுகளாகும்.

2018 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்விசாரா பதவியணியினரின் வேலை நிறுத்தம் தவிர, நிறுவனத்தின் வளர்ச்சி போக்கு காணப்பட்டதோடு, வெற்றிகளும் பெற்றுக் கொண்ட ஆண்டு இதுவாகும். நிறுவகத்தின் கல்வி பதவியணியில் நிலவிய வெற்றிடமானது அவுஸ்திரேலியா, குயின்ஸ்லாந்து தொழினுட்ப பல்கலைக்கழகத்தில் அவருடைய முதுமானி கற்கையினை நிறைவு செய்து கலாநிதி எச்.டி.விஜேசேக்கர மீண்டும் வருகை தந்ததன் பின்னர் பூர்த்தியடைந்தது. இதற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். குறித்த மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு நிறுவனத்தின் பலம்மிக்க மனிதவளம் பக்கபலமாக இருந்ததோடு, இதன் மூலம் இதன் கல்வி அதேபோன்று ஆராய்ச்சி பணிகள் மேம்படுத்தப்பட்டன. இரண்டாம் மொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலத்தில் நடாத்தப்படவுள்ள

ஆங்கிலமொழியினை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிக்கான பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டதுடன், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி கட்டமைப்பில் துரித மாற்றமானது 2018 ஆம் ஆண்டில் காணக்கூடியதாக இருந்தது அதேபோன்று ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து போட்டிகரமான ஆராய்ச்சி மானியமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்ததோடு, கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றைச் செய்து கொண்டு நடைமுறையிலுள்ள இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுமானி பட்டத்தினை முழுமையாக நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகளின் பொழிப்பு இங்கு கீழ் குறிப்பிடப்படுகின்றது.

(ஆ) முக்கிய நிகழ்வுகள்

இந்தப் பகுதியின் கீழ் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டினுள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது நிறுவன ரீதியாக அடைந்துள்ள முக்கிய நிகழ்வுகள் பற்றி சுருக்கமாக குறிப்பிடப்படுகின்றது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பிலான மேலதிக விரிவான தரவுகள் இந்த ஆண்டறிக்கையின் ஏனைய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன..

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இலங்கையில் கலைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து 5,000,000/- ரூபா பெறுமதி மிக்க போட்டிகரமான ஆராய்ச்சி மானியமொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, இது நிறுவனத்திற்கு நிறுவன ரீதியில் கிடைக்கப் பெற்ற முதலாவது ஆராய்ச்சி மானியமாகும்.

* மே மாதத்தில் நிறுவனத்திற்கும் கல்வி அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, அதன் கீழ் பின்வரும் துறைகள் தழுவப்பட்டன:

    i. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இரு மொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா குழுவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் கல்வி அமைச்சின் அனுசரணை கிடைத்தமை.

    ii. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானி பட்டம் மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டம் என்பன சார்பில் கல்வி அமைச்சினால் பத்து (10) மாணவர்களுக்கு அனுசரணை வழங்கப்பட்டமை.

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் முழு நாட்டினையும் தழுவும் விதத்தில் அரசதுறைசார்ந்த ஆசிரியர் பதவியணிகளிலிருந்து தெரிவி

செய்யப்பட்ட 40 பேருடன் நவெம்பர் மாதத்தில் இரு மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியானது ஆரம்பிக்கப்பட்டது. குறித்த 40 பேர்களுக்கும் முழுமையான அனுசரணை கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. இரு மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியானது இலங்கையில் நடாத்தப்படும் இத்தகைய ஒரே நிகழ்ச்சித்திட்டமாவதோடு தேசிய ரீதியில் முக்கியத் தேவையொன்று இதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது.

* க.பொ.த (சாதாரண தரம்) இலக்கிய புதிய பாட சிபாரிசுக்கு ஏற்ற விதத்தில் ஆசிரியர்களின் திறன்களை கட்டியெழுப்புவது தொடர்பில் 30 மணித்தியாலம் கொண்ட குறுகியகால பாடநெறியொன்று 23 பேர்களின் பங்களிப்புடன் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

* யூலை மாதத்தில் 23 மாணவர்கள் கொண்ட குழுவொன்றுக்கு தரம்மிக்க தரவு ஆய்வு பற்றிய 30 மணித்தியாலம் கொண்ட குறுகியகால பாடநெறியொன்று நடாத்தப்பட்டது. இந்த பாடநெறி புறம்பான ஒன்றாக இருந்ததோடு, நடைமுறையில் மானிடவியல் மற்றும் சமூகவியல் என்பவற்றின் தரவு பாவனையின் போக்கு காரணமாக இதற்கு உயர் கேள்வி நிலவியது.

* நியூயோர்க் பரூக் கல்லூரியின் மாணவர்களுக்கும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டத்தினைக் கற்கும் மாணவர்களுக்கும் இடையில் இணையத்தின் ஊடாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பரஸ்பர ஒத்துழைப்பு இந்த ஒத்துழைப்பின் கீழ் மொழிக் கல்வித் துறை பற்றிய புதிய அளவுகோள்களை நோக்கி செல்வதற்கும் முன்வைப்புகளை செய்வதற்கும் நியூயோர்க் பரூக் கல்லூரியின் பட்ட அபேட்சகர்களும் அதேபோன்று ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பட்டப்பின் படிப்பு அபேட்சகர்களும் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் செயலாற்றினர்.

* உயர்தர ஆங்கில இலக்கியம் தொடர்பிலான பாட சிபாரிசு தொடர்பில் ஒக்ரோபர் மாதத்தில் 30 மணித்தியாலம் கொண்ட குறுகியகால பாடநெறியொன்று 17 மாணவர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கிரமமாக இந்த பாடநெறிகள் நடாத்தப்படுவது க.பொ.த உயர்தரத்திற்கான உள்நாட்டு பாடசிபாரிசு தொடர்பில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதற்கும் .

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நவெம்பர் மாதம் மெனிடோபா பல்கலைகழக்கத்தின் பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்களை வரவழைத்ததோடு, அவர் திறனாய்வு மற்றும் பங்குபற்றல் ஆராய்ச்சி அணுகுகை தொடர்பிலான மாநாடொன்றையும் கலாசார ரீதியில் கற்பித்தல் முறை, கனடா மற்றும் நேபாளத்தில் கற்றறிந்த பாடங்கள் என்னும் தலைப்பில் கலந்துரையாடலொன்றையும் நடாத்தினார். பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்கள் தனது சேவைகளை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு சுயமாக வழங்கினார்.

* இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட பாடநெறிக்கு 52 மாணவர்களைக் கொண்ட புதிய குழுவொன்று ஆகஸ்ட் மாதத்தில் பதிவு செய்யப்பட்டது.

* இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றி முதுமானிப் பட்ட பாடநெறிக்கு 22 மாணவர்களைக் கொண்ட புதிய குழுவொன்று நவெம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்டது.

* மாணவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சி பிரேரிப்புகளை மதிப்பிடும் பொருட்டு நிபுணத்துவ குழுவொன்றிடமிருந்து மீள் ஊட்டல் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிப்பதற்கும் இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட ஆராய்ச்சி மாநாடானது சனவரி மாதத்தில் நடாத்தப்பட்டது.

* மாணவர்கள் அவர்களுடை ஆராய்ச்சி பிரேரிப்புகளை மதிப்பிடும் பொருட்டு சமர்ப்பித்து நிபுணத்துவ குழுவொன்றிடமிருந்து மீள் ஊட்டல் பெற்றுக் கொள்ளப்படும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட ஆராய்ச்சி மாநாடானது யூலை மாதத்தில் நடாத்தப்பட்டது.

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமும் Senator George Mitchell Institute for Peace and Globle Security நிறுவனமும் இணைந்து கலைகள் மற்றும் நல்லிணக்கம் என்னும் தலைப்பில் சருவதேச மாநாடொன்றை யூன் மாதத்தில் நடாத்தியதோடு, தேசிய மற்றும் சருவதேச மட்டத்திலான கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்விமான்கள் பலர் இதற்கு பங்களிப்பு நல்கினர்.

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் சனவரி மாதம் புதிய திறமுறை முகாமைத்துவ திட்டமொன்று வரையப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டதோடு, முகாமைத்துவ சபையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த புதிய திறமுறை முகாமைத்துவ திட்டத்தின் மூலம் 2018-2021 வரையிலான காலப்பகுதி தழுவப்படும்.

* பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, MTESL, இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டம் என பாடநெறிகளை பூர்த்தி செய்யும் மூன்று வழிமுறைகளுடன் இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டத்தை மீளமைப்பதற்குத் தேவையான சகல பணிகளும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டதோடு, பல்கலைக்கழகத்தினுள் தேவைப்படும் நியதிச்சட்ட ரீதியிலான அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்த மீளமைப்பு பிரேரிப்பு 2019 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலப்பகுதியில் அங்கீகாரத்தின் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இரண்டாம் மொழி சூழ்நிலையில் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டம் இலங்கை தகைமைகள்

கட்டமைப்பு வழிகாட்டல்களுக்கு அமைவாக மீளமைக்கப்பட்டு, இதன் பொருட்டு திறந்த பல்கலைக்கழகத்தின் செனட் சபையினதும் மூதவை சபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்தோடு, இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதிய துணை விதியொன்றும் வகுக்கப்பட்டு பூத்தி செய்யப்பட்டுள்ளது.

* ஆங்கிலமொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய புதிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியின் அபிவிருத்தி வேலைகளும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டதோடு, இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடாத்தப்படவுள்ளது.

மேற்போந்த பொழிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு முழுவதும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பல கட்டங்களை கடந்துள்ளது. கடந்த பல வருடங்களாக செயற்படுத்தப்பட்ட அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டு அதன் கல்வி பாடநெறியினை வெற்றிகரமாக பல்வகைமைப் படுத்துவத்றகும் இருமொழிக் கல்வி போன்ற தேசிய தேவையுடனான புதிய துறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் நிறுவனத்திற்கு இயலுமானது. கல்வி அமைச்சுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கல்வி துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் மற்றும் தரம் மிக்க உயர் பட்டப்படிப்பு கல்வியினை வழங்கும் நிறுவனமொன்றாக அதன் பங்களிப்பு நல்கப்படுகின்றது.

கலைகள் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து போட்டிகரமான ஆராய்ச்சி மானியமொன்றை பெற்றுக் கொண்டமை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிகளின் பல்வகைமையினை எடுத்துக் காட்டுகின்ற ஒரு காரணியாகும். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிறுவன ஆராய்ச்சி கலாசாரமொன்றைத் தாபித்தல் அதேபோன்று பட்டப்பின் படிப்பு நிறுவன மொன்றுக்கு கட்டாயமாக இருக்கவேண்டிய நிறுவனத்தின் ஆராய்ச்சி பெயரினை கட்டியெழுப்புவதில் முன்னோக்கி நகர்ந்த பாரிய நடவடிக்கையொன்றாக இந்த மானியத்தை குறிப்பிடலாம். இந்த மானியத்தின் கீழ் முழுநேர ஆராய்ச்சி உதவியாளர்கள் இருவரும் கருத்திட்ட முகாமையாளர் ஒருவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதோடு, இந்த கருத்திட்டத்திற்கு தலைமைத்துவ மற்றும் வழிகாட்டல் என்பவற்றை வழகுவதற்காக கருத்திட்ட மதியுரைக் குழுவொன்று தாபிக்கப்பட்டது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இந்த மானியத்தின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு தரப்பினர்களுடன் புதிய உறவுகளை மேம்படுத்துவதற்கு இயலுமானது. இந்த மானியத்தின் கீழ் அயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகரத்தில் குயின்ஸ் பல்கலைக் கழகத்தின் Senator George Mitchell Institute for Peace and Globle Security நிறுவனத்தின் கல்விமான்கள் மற்றும் நிபுணர்களுடன் இணைந்து கலைகள் மற்றும் நல்லிணக்கம் என்னும் தலைப்பில் சருவதேச மாநாட்டினை ஏற்பாடு செய்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமானது. இந்த ஒத்துழைப்பின் மூலம் மேலும் பிரேரிப்புகளை முன்வைப்பதற்கும் நிறுவனம் சார்பில் மென்மேலும் பாரிய சருவதேச மானியங்களை பெற்றுக் கொள்வதற்கும் இயலுமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பல்வேறு துறைகளில் விசேட விருத்தியினை காண முடிந்துள்ளது. தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள முதுமானிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டில் பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதற்கு மேலதிகமாக க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தர இலக்கியம், தரம் மிக்க தரவு ஆய்வு, ஆராய்ச்சி ஆவணங்கள் மற்றும் வழிமுறைகள் போன்ற பல்வேறுபட்ட துறைகள் தொடர்பில் இவற்றுக்குரியதாக புதிய குறுகியகால பாடநெறிகளை நடாத்துவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமாகியுள்ளது. இந்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் அதிகரித்து வரும் எல்லையினை விசேடமாக ஆங்கில பட்டப்பின் படிப்பின் அத்துடன் சமூகவியல் மற்றும் மானிடவியல் என்பவற்றின் பரந்துபட்ட தேசிய கல்வித் தேவையை வழங்குவது நிறுவனத்தின் பலம் அதேபோன்று நிலைபேறான தன்மைக்கும் முக்கியமானதாகும்.

(இ) சவால்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விருத்தி மற்றும் பல்வகைத் தன்மை என்பவற்றின் மூலம் நிறுவனத்தின் பயணம் மிக முக்கிய சாதகமான போக்கினை காட்டுகின்றதோடு, இதன் விருத்தியுடன் இதற்கு முகங்கொடுக்க நேரும் அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் பற்றி கவனத்துடன் இருப்பது முக்கியமானதாகும். அத்தகைய சவால்கள் தொடர்பிலான எதிர்பார்ப்புடன் இருக்கின்றமை பாதிப்பினை குறைப்பதற்கும் எதிர்பாரா திட்டங்களையும் திறமுறைகளையும் தயாரிப்பதற்குமான வாய்ப்பு கிடைக்கப்பெறும் .

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் முகங்கொடுக்கும் சவால் மிக்க துறையொன்றாவது பிற அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி வழங்குநர்களினால் முன்வைக்கப்படும் ஆங்கிலமொழி கல்விக்குரிய பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் அளவு அதிகரித்துள்ளமையாகும். இந்த துறையிலுள்ள ஏனைய போட்டியாளர்களுக்கிடையே இல்லாதிருக்கின்ற விசேட பெறுபேறுகள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வரலாற்றினுள் காணக்கூடியதாகவுள்ளது. ஆயினும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மாணவர்களை கவரும் விதத்திலான நவீன நிகழ்ச்சித்திட்டங்கள் வழிமுறைகள் என்பன தொடர்ச்சியாக முன்வைப்பதற்கு இயலுமாகும் வகையில் நிறுவனத்தை நிலைப்படுத்துவது முக்கியமானதாகும். இது சம்பந்தமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் செயற்பாட்டு ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துறையொன்றாவது மீள் கட்டமைக்கப்பட்ட இரண்டாவது மொழியாக ஆங்கில மொழியினை கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டத்தை அபிவிருத்தி செய்தமையாகும். இந்த மீள் கட்டமைப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கல்விக்கான அணுகுகையை பலப்படுத்தல், முழுமையான கற்பித்தல் நடைமுறை செயற்பாடுகள் மற்றும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, ஆராய்ச்சி சாராத எழுத்துமூலமான முதுமானிப் பட்டம் மற்றும் ஆராய்ச்சி மீது அடிப்படையாகக் கொண்ட முதுமானிப் பட்டம் போன்ற பட்டத்தினை பூர்த்தி செய்யும் மாற்று வழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மீள் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் இரண்டாவது மொழியாக ஆங்கில மொழியினை கற்பித்தல் பற்றிய நவீன நியதிகள்

மற்றும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, 2005 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் ஆரம்பக் கட்டத்தின் இரண்டாவது மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்டம் அதே வடிவத்தில் இருந்த ஒரே நிகழ்ச்சித்திட்டமாகவிருந்த காலத்தில் இதன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தாக்கம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக முகங்கொடுப்பதற்கு நேர்ந்துள்ள சவால்களுக்கிடைய மற்றுமொரு துறையாவது மனிதவளத்தில் நிலவும் பற்றாக்குறையாகும். பட்டப்பின் படிப்பு நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள வடிவத்தின் கீழ் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் நிரந்தர பதவியணிக்கான சில பதவிகளை உருவாக்கிக் கொண்டாலும் புதிய நிரந்தர பதவியணி முக்கியமாக கல்வி பதவியணிக்கான அனுமதிகள் மிக மட்டுப்பட்டதாகும். இத்தகைய சூழ்நிலையில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு ஈட்டப்பட்ட வருமானத்தினை பயன்படுத்தி மேலும் மேலும் ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புகளின்பால் கவனம் செலுத்தவேண்டி நேரிட்டுள்ளது. நிறுவனம் துரிதமாக வளர்ச்சி கண்டு பாரிய அளவிலான மாணவர்களுக்கும் ஓரளவு பல்வகைமைப்படுத்தப்பட்ட நுகர்வு வலையமைப்பிற்கும் சேவையினை வழங்குவதன் காரணமாக புதிய தகைமைகளைக் கொண்ட பதவியணியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் தக்க வைத்துக் கொள்வதும் அவசர விடயமொன்றாக மாறியுள்ளது. இந்த சவால்களை வெற்றிக் கொள்வதற்கு பட்டப்படிப்பு நிறுவனத்தினால் வேறு விதத்தில் பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தினால் செயற்பாட்டு ரீதியில் பின்பற்றப்படும் மற்றுமொரு தீர்வாவது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தை பயன்படுத்தி நிர்வாக ரீதியில் சுயமாக செயற்படுவதாகும் . மாணவர்களின் தகவல் முகாமைத்துவ முறைமையொன்றுக்கு ஆர்வ வெளிப்படுத்தல் கோரப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தக்கூடிய விதத்தில் பிரேரிப்புகள் மதிப்பிடப்பட்டு வருகின்றது.

(ஈ) எதிர்கால திட்டங்கள்

2018 ஆம் ஆண்டில் ஈட்டிக் கொண்ட வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு, பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2019 ஆம் ஆண்டையும் அதன் பின்னரும் மென்மேலும் வெற்றிகளைப் பெறும் ஒன்றிணைந்து செயற்படும் காலமாக பார்க்கின்றது. 2018-2021 திறமுறை முகாமைத்துவ திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தனியார் துறையில் சேவை புரிபவர்கள், அரசாங்க துறையில் சேவை புரிபவர்கள் மற்றும் பொது மக்கள் போன்ற கவனம் செலுத்தப்படாத துறைகளைச் சேர்ந்த மாணவர்களை அணுகுவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமாகியுள்ளது. உயர் மட்டத்திலும் நிலையான தன்மையிலும் ஆங்கில மொழி ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கேள்வி நிலவுகின்றதோடு, முறையற்ற விதத்தில் சிறு விடய சிபாரிசுகளின் கீழ் ஒழுங்குறுத்தப்படாத நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் தற்போது

இந்த கேள்வி பூர்த்தி செய்யப்படுகின்றது. 250 மணித்தியாலங்களுக்கு கூடுதலான நேருக்கு நேர் மேற்கொள்ளப்படும் அத்துடன் கற்றல் செயலமர்வு வடிவத்தில் நடாத்தப்படும் இந்த ஆங்கிலமொழி தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா இந்த வெற்றிடத்தை நிரப்புகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு விசேட கேள்வி நிலவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய ரீதியில் முக்கிய தேவையினை பூர்த்தி செய்வதோடு, இதற்கு மேலதிகமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் நிறுவனத்திற்கு மிக முக்கிய வருமான வழியாகவும் அமையும்.

ஆங்கிலமொழி தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவுக்கு மேலதிகமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இரு மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியொன்று எதிர்காலத்தில் முதுமானிப் பட்டம் மட்டத்தில் கட்டம் கட்டமாக விருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு இது சம்பந்தமாக விருப்பத்தினை தெரிவித்துள்ளமையினாலும் பொது மக்கள் ஊக்கத்துடன் இருப்பதனாலும் இந்த டிப்ளோமா பாடநெறியை முதுமானிப் பட்டம் வரை தரம் உயர்த்துவது மாற்று வழியொன்றாவதோடு, நிறுவனத்தினால் செயற்பாட்டு ரீதியில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் செயற்பாட்டு ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மற்றுமொரு துறையாவது ஆராய்ச்சி மானியங்களுக்கு நிதி வழங்குவதாகும். 2018 ஆண்டில் பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து ஆய்ராச்சி மானியமொன்றைப் பெற்றுக் கொண்டமை நிறுவனத்திற்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். முழுமையான ஆராய்ச்சி மானியமொன்றை கையாளுவதன் மூலம் கிடைத்த அனுபவம் மேலும் மானியங்களுக்கான கோரிக்கைகளைச் செய்வதற்கும் பாரிய அளவிலான மானியங்களை கோருவதற்கும் வெளிநாட்டு பல்பலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் கைகோர்ப்பதற்கு நிறுவனத்திற்கு இயலுமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே பிரேரிக்கப்பட்டுள்ள மாணவர் தகவல் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தல் கூரை புனரமைப்பு வேலைகள் தவிர ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டில் எந்தவித பாரிய அளவிலான மூலதன அல்லது செயற்பாட்டு முதலீடொன்றைச் செய்வதற்கு திட்டமிடப்படவில்லை. ஆயினும், எதிர்காலத்தில் அதிகரித்துவரும் மாணவர்கள் தொகை மற்றும் சிறந்த மாணவர் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற தேவைகளுக்காக நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் மேலும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிட்டுள்ளது. அதேபோன்று சேவை வழங்கலை முறைப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் அதன் நாளாந்த செயற்பாடுகளின் போது மென்மேலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தை பயனுபடுத்துவதற்கும் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல
பணிப்பாளர்/ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

(உ)ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் மாணவர்களின் தகவல்களும்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்புபட்ட விரிவான தரவுகள் இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

* முழுநேர நிகழ்ச்சித்திட்டங்கள்

அ. ஆராய்ச்சி மூலம் மேற்கொள்ளப்படும் பட்டப்பின் படிப்பு

1. தத்துவ முதுமானிப் பட்டம்
2. தத்துவமானிப் பட்டம்

ஆ. ஆராய்ச்சியல்லாத எழுத்துமூல அதேபோன்று ஆராய்ச்சிப் பிரிவுகளையும் கொண்ட பட்டப்பின் படிப்பு

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்.
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்

இ. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.
3. இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

* **நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்று சார்பிலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை**

நிகழ்ச்சித்திட்டம்	மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
தத்துவ முதுமானிப் பட்டம்	01
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்டம். (MA in TESL)	70
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம். (PG Dop/MA in TESL)	117
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்	63
இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDipBE)	40
மொத்தம்	291

* **கல்வி ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்துள்ள மாணவர்களின் விபரம்**

பாடநெறி	உள்வாங்கல் 2018	1ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி I)	1ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி II)	பட்டம் பெற்றோர்
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்டம்.	-	-	70	12
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம்.	52	62	3	02
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்	22	30	11	02
இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	40	-	-	-
மொத்தம்	114	92	84	16

* **கால பாடநெறி**

பாடநெறியின் பெயர்	காலப்பகுதி	பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை
க.பொ.த (சா.த) புதிய பாடத்திட்டத்திற்கான ஆங்கிலமொழி இலக்கியம் கற்பித்தலில் ஆசிரியர்களின் ஆற்றலை மேம்படுத்தல் பற்றிய குறுகிய கால பாடநெறி	20 மணி. (பெப்ரவரி 07 - மே 22)	23	23
தரவு ஆய்வு பற்றிய குறுகிய கால பாடநெறி	20 மணி. (யூன் 09 - ஆகஸ்ட் 04)	20	20
க.பொ.த (உ.த) ஆங்கிலமொழி இலக்கிய புதிய பாடத்திட்டம் பற்றிய குறுகிய கால பாடநெறி	42 மணி. (ஒக்ரோபர் 06 - ஒக்ரோபர் 27)	17	14
மொத்தம்			57

* **புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம்**

பாடநெறி	மொழிமூலம்	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	ஆங்கிலம்	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
ஆங்கிலமொழியை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா		பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, 2019 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது காலாண்டில் பாடநெறியானது ஆரம்பிக்கப்படும்.

* **மாணவர்களின் செயலாற்றுகை** - 2017 / 2018

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் முழுநேர நிகழ்ச்சித்திட்ட பாடநெறிகளில் மாணவர்கள் காட்டியுள்ள செயலாற்றுகை பற்றிய விபரமானது இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது .

நிரல் 1 -இறுதி மதிப்பீட்டின் போது மாணவர்களின் செயலாற்றுகை 2017 / 2018
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம்.

பாடநெறி குறியீட்டு இலக்கம்	பதிவு	தகைமை பெற்றோர்	தோற்றி யோர்	சித்தி அடைந்தோர்	பூர்த்தி செய்த நூற்றுவீதம்
ELP1301	61	35	25	24	68.6%
ELP1201	73	40	26	22	55.0%
ELP1202	60	38	24	23	60.5%
ELP1203	64	32	25	25	78.1%
ELP1101	64	37	31	25	67.6%
ELP1102	65	46	35	30	65.2%
ELP1103	32	15	11	11	73.3%
ELP1104	13	06	04	04	66.7%
ELP1105	13	08	06	06	75.0%
ELP2101	44	39	38	37	94.9%
ELP2102	45	41	39	39	95.1%
ELP2301	03	02	02	02	100%

நிரல் 2 - இறுதி மதிப்பீட்டின் போது மாணவர்களின் செயலாற்றுகை 2017 / 2018

இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்.

பாடநெறி குறியீட்டு இலக்கம்	பதிவு	தகைமை பெற்றோர்	தோற்றி யோர்	சித்தி அடைந் தோர்	பூர்த்தி செய்த நூற்றுவீதம்
LTP1201	23	17	14	13	76.5%
LTP1202	22	17	11	11	64.7%
LTP1101	22	21	14	14	66.7%
LTP1102	17	14	10	09	64.3%
LTP1103	23	16	12	12	75%
LTP1104	27	23	19	19	82.6%
LTP1105	28	21	18	18	85.7%
LTP1203	26	19	15	15	78.9%
LTP1204	19	16	13	13	81.3%
LTP1106	21	17	10	10	58.8%
LTP1107	19	18	14	14	77.8%
LTP2101	15	13	11	11	84.6%
LTP2102	16	13	10	10	76.9%
LTP2102	13	10	09	09	90.0%

* **கற்போருக்கு கிடைக்கும் உதவிகள்**

அவர்களுடைய பிரேரிப்புகளை சமர்ப்பிக்க தயாராகும் மாணவர்கள் சார்பில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அவர்கள் ஒவ்வொருவருடனும் நேருக்கு நேர் ஆழமாக கலைந்துரையாடியுள்ளது. இது காலத்துடன் இணைந்த செயற்பாடாகும். அதேபோன்று ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு சம்பந்தமாக பின்பற்ற வேண்டுமென்பதனால் மிக கவனம் செலுத்தப்பட்ட உயர் மட்டத்திலான ஆராய்ச்சிப் பிரேரிப்புகளை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு உதவியினை வழங்குகையில் அது வெற்றிகரமான திறமுறையொன்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஒத்தாசை வழங்குவதற்கு அதேகால மாணவர்களினது உதவியும் வழிகாட்டுபவர்களின் குறியிலக்கு பிரயோகங்களை வழங்கும் வழிமுறையொன்றாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் NEO-LMS வழிமுறையினைப் பயன்படுத்துவது தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக மதிப்பீடு செய்கையில் சகல மாணவர்களினதும் பிரச்சினைகளைத் திரட்டக்கூடிய விதத்தில் பிரச்சினைகளை பரிமாறிக்

கொள்வதற்கும், கல்விசார் பதவியணியினருக்கு பின்னூட்டல்களை வழங்கக்கூடிய விதத்திலும் இந்த கலைமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டினதும் ஒருங்கிணைப்பாளர்கள் மாணவர்கள் சார்பில் இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆரம்பித்துள்ளனர்.

(ஊ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரங்கள்

முழுநேர மற்றும் குறுகியகால பாடநெறிகள் தவிர ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்வி செயற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகள் உட்பட பங்குபற்றியவர்களின் தரவுகள் தொடர்பிலான சுருக்க விபரங்களும் படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி சங்கம்

இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம். (MA in TESL)

இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட ஆராய்ச்சி சங்கம் 24 முன்வைப்புகளை கொண்டிருந்ததோடு, இவற்றுள் பல்வேறுபட்ட தொனிப்பொருட்கள் வெளிக் கொண்டுவரப்பட்டதைப் போன்றே மொழி கற்பித்தல், பாட புத்தகங்களின் ஆய்வு, இனங்காணல் மற்றும் அபிலாசைகள் போன்றவற்றுக்கான தொழினுட்ப பிரயோகங்கள் போன்ற துறைகளுக்குரிய ஆய்வுகளும் உள்ளடக்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக ஆங்கிலமொழி கற்பித்தல் சம்பந்தமாக நிலவும் கீழ்மட்ட சவால்களை தீர்ப்பத்றகு செயற்பாட்டு ரீதியிலான ஆராய்ச்சி மற்றும் விவரண ரீதியான ஆய்வுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட ஆராய்ச்சி சங்கத்தில் மாணவர்கள் முன்வைப்புகளைச் செய்தபோது

இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் (MA in TLSC)

இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட சங்கம் யூலை மாதத்தில் நடத்தப்பட்டதோடு, தேசிய பல்கலைக்கழகங்கள் பலவற்றின் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட கல்விமான்களைக் கொண்ட நிபுணத்துவ குழுவொன்றின் மூலம் மதிப்பிடும் பொருட்டு 12 மாணவர்களினால் அவர்களுடைய ஆராய்ச்சிப் பிரேரிப்புகள் முன்வைக்கப்பட்டன. இந்த தலையங்கங்கள் விடய சிபாரிசுகளின் நோக்கங்களுக்காக நாடகங்களின் பயன்பாடு, ஆங்கிலமொழி, நாடகங்களை கற்பித்தல், ஆண் - பெண் பால் பற்றி அறிந்து கொள்ளலும் இலக்கியமும், பணித்தேவை மற்றும் ஆசிரியர்களை அறிந்து கொள்ளல், இலக்கியம் கற்பித்தலில் உருவாகும் தர்க்க ரீதியிலான பிரச்சினைகள் வரை நீடித்திருந்தது. அரச, அரசசார்பற்ற தொழிற்கல்வி மற்றும் இரண்டாம் நிலைக்கல்வி பின்னணிகளைக் கொண்டு சமூகமளித்திருந்த மாணவர் குழுக்களின் பல்வகையினை இந்த மாற்றுத் தலையங்கங்களின் மூலம் எடுத்துக் காட்டியது.

* **2018 மே மாதத்தில் கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டமை**

கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டமை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வரலாற்று காலப்பகுதியினுள்ளும் அதேபோன்று அதன் கல்வி விடய சிபாரிசின் பல்வகைத் தன்மையில் நுழைந்த புதிய முயற்சியொன்றாக எடுத்துக் காட்டுகின்றது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் என்னும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் பத்து மாணவர்களுக்கு வருடாந்த அனுசரணை வழங்கப்படுவதோடு, இது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் படிப்பு கல்வியின் தரம் மற்றும் அடையாளத்தை உத்தியோகபூர்வமாக சிபாரிசு செய்வதாகும். இதற்கு மேலதிகமாக இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் இலங்கையில் நிலவும் இந்த வகையிலான ஒரே நிகழ்ச்சித்திட்டம் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 40 மாணவர்களைக் கொண்ட குழு சார்பில் கல்வி அமைச்சு அனுசரணை வழங்குவது இந்த புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய முக்கியத்தும் அதேபோன்று விடய சிபாரிசில் தேசிய ரீதியில் முக்கியத்தும் வாய்ந்த விடயங்கள் சம்பந்தமான சிறந்த பயனை பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்குள்ள ஆற்றலை எடுத்து காட்டியாகும்.

Education Ministry, PGIE partner to improve, professionalise English teaching

The Ministry of Education has signed a Memorandum of Understanding with the Postgraduate Institute of English (PGIE) of the Open University of Sri Lanka. Under the terms of the MoU, the Ministry of Education will sponsor teachers, In-service Advisors (ISAs), Assistant Directors and other relevant officials from the Ministry to improve their professional practice through higher education and training at the PGIE, the premier institute for postgraduate English education in the country.

Teachers selected through this MOU will receive high quality postgraduate education as well as professional development either through three programs offered by PGIE: Master of Arts in Teaching English as a Second Language (MA TESL), Master of Arts in Teaching Literature (MA TLSC) and the Postgraduate Diploma in Bilingual Education (PGDip BE). The two MA programs offer a unique blend of theory and practice and have contributed to the professional development of English educators from a wide range of backgrounds.

The Postgraduate Diploma in Bilingual Education is a new initiative of the PGIE that seeks to support the policy of promoting bilingual instruction in the country's education system. This program will help train a new generation of teachers capable of delivering subject content bilingually in the classroom, supporting the development of students' mother tongue and English competencies. Building on global research into bilingual education and its manifold benefits, bilingual education will support students to acquire English language competency in an authentic manner and also aims to develop student fluency, competency and confidence in the use of English.

Speaking at the signing Sunil Hettiarachchi, the Secretary to the Ministry of Education noted the importance of professionalising the teaching of English in Sri Lanka. He pointed out that for the first time, the O/L pass rate for English had exceeded 50% and that the only way to ensure that this success is sustained is through continued investment in English teachers from all areas of the country. B.M. Weerasuriya, Director of the English and Foreign Languages Branch of the Ministry of Education also highlighted the importance of partnerships and collaboration such as the MoU with the PGIE as a key facet of the ministry's strategy to improve English teaching in the country. Dr. Harshana Rambukwella, the Director of the PGIE, expressed his appreciation to Hettiarachchi, as well as the officials at the Ministry of Education in particular for their commitment in investing in English education and professionalising the teaching of English in the country.

The PGIE was established in 2005 and is the only tertiary level institution dedicated to improving and professionalising English teaching and pedagogy in Sri Lanka. Affiliated to the Open University of Sri Lanka, the PGIE offers its courses in a blended learning mode (combining Open and Distance Learning methodology with traditional approaches) to maximise its outreach and flexibility to cover working professionals, school leavers and those located in various parts of the country. For further details about the programmes conducted by the PGIE, please contact the Senior Assistant Registrar via email, sarpgie@ou.ac.lk or via phone 0112825805.

2018 மே மாதத்தில் கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினைக் கைச்சாத்திடல் (Daily FT பத்திரிகை)

* **இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை ஆரம்பித்தல்** (PGDip BE)

2018 நவம்பர் மாதத்தில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சுனில் ஹெட்டிஆரச்சி அவர்களின் பங்குபற்றுதலுடன் இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கத்தின் துணைவேந்தர் கலாநிதி அன்பழகன் அரியதுறை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டதோடு, சகல பீடங்களினதும் பீடாதிபதிகள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ சபை குழு உறுப்பினர்கள் அடங்கலாக பிற பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.

2018 நவம்பர் மாதத்தில் இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியின் ஆரம்ப வைபத்தில் கலந்து கொண்ட சிலர்

*** 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் / மாநாடுகள் / அழைப்பின்பேரில் மேற்கொள்ளப்பட்ட விரிவுரைகள் பற்றிய விபரங்கள்**

கனடா மனிடோபா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்களினால் 'கலாசார ரீதியில் ஆக்கப்பூர்வ கற்பித்தல் முறை: கனடாவிலும் நேபாளத்திலும் கற்றறிந்த பாடங்கள்' என்னும் தலைப்பில் பொது கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டதோடு, கற்பித்தல் மற்றும் கற்றல் உட்பட இந்த நிலைமைகளை ஏற்புடைத்தாக்கிக் கொள்ளும் கலாசாரத்துடன் தர்க்க ரீதியில் விடய சிபாரிசுகளுக்கு இசைவாக்கம் அடையவேண்டியது எவ்வாறு என்பது பற்றி அவர் இந்த சந்தர்ப்பத்தில் விவரித்தார். ஒன்றுக்கொன்று மாறுபட்ட சூழலைக் கொண்ட நேபாளத்திலும் கனடாவிலும் விடய சிபாரிசுகளை திட்டமிடுகையில் சவால்களை வெற்றிக் கொண்ட விதம் பற்றி பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்கள் அவருடைய கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டினார். இந்த கலந்துரையாடலுக்கு அண்ணளவாக 40 உறுப்பினர்கள் கலந்துகொண்டதோடு, இது வெற்றிகரமான கலந்துரையாடலாக நடாத்தி செல்லப்பட்டது. அதன் போது இந்த பணிக் கட்டமைப்பு இலங்கை சூழ்நிலையில் பயன்படுத்தக்கூடியது எவ்வாறு என்பது பற்றி பங்குபற்றியோர் பல கேள்விகளை எழுப்பினர். இந்த கலந்துரையாடலானது நவம்பர் மாதம் 07 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்களினால் 'கலாசார ரீதியில். ஆக்கப்பூர்வ கற்பித்தல் முறை' என்னும் தலைப்பில். கலந்துரையாடலை நடாத்துகையில்

பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்களினால் பொதுக் கலந்துரையாடலுக்கு மேலதிகமாக 25 பேர்களின் பங்குபற்றுதலுடன் 'திறனாய்வு மற்றும் பங்குபற்றல் ஆராய்ச்சி அணுகுகை' என்னும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினார் . இந்த கலந்துரையாடலின் போது கல்வி பின்னணியில் ஆராய்ச்சி சார்பில் மேற்கொள்ளப்படும் திறனாய்வு மற்றும் பங்குபற்றல் அணுகுகை, தற்போது ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் கற்பிப்பவர்களை மற்றும் கற்கின்றவர்களை வலுப்படுத்தல், உள்ளக பெறுமதிகளை தேடிப் பெறுதல் போன்றவற்றிற்கு முக்கிய காரணியாய் அமைவது எவ்வாறுரெனவும் ஆராயப்பட்டது. இந்த கலந்துரையாடல் நவம்பர் மாதம் 07 ஆம் திகதி முற்பகல் 9.30 மணியிலிருந்து முற்பகல் 11.30 மணிவரை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

பேராசிரியர் க்ளியா ஸ்மிட் அவர்களினால் 'திறனாய்வு மற்றும் பங்குபற்றல் ஆராய்ச்சி அணுகுகை' என்னும் தலைப்பில் கலந்துரையாடலை நடாத்துகையில்

(எ) மனிதவளங்கள்

பின்வரும் மனிதவளங்களை நிறுவனமானது கொண்டுள்ளது
கல்விசார் பதவியணி பற்றிய தகவல்

நிறுவனம்	விடயம்	மொழி மூலம்	சிரேட்ட பேரா சிரியர்	பேரா சிரியர்	சிரேட்ட விரிவு வரை யாளர்	விரிவு ரை யாளர்	தற்கா லிக விரிவு ரை யாளர்	போத னா சிரிய ர்
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்		ஆங்கி லம்	-	01	03	-	01	01*
மொத்தம்		-	-	01	03	-	01	01

* ஒப்பந்த அடிப்படையிலான போதனாசிரியர்

கல்விசாரா பதவியணி பற்றிய தகவல்

நிறுவனம்	மிகச் சிரேட்ட	சிரேட்ட பதவியணி	கனிஷ்ட பதவியணி	சிற்றூழியர்கள்
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்	-	02	05	02
மொத்தம்	-	02	05	02

மொத்த பதவியணி - 14
(கல்விசார் பதவியணியில் 5 பேர்களும் நிருவாக மற்றும் கல்விசாரா பதவியணியில் 9 பேர்களும்)

(ஏ)பணியாட்டொகுதியினரினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் வெளியீடுகள் பற்றிய விபரம்

❖ **ஆராய்ச்சி / நூல் அத்தியாயங்கள் / வெளியீடுகள் / முதுமானி ஆய்வுக் கட்டுரைகள்**

நூல்கள் 01	முதுமானி ஆய்வுக் கட்டுரைகள் 01	நூல் அத்தியாயங்கள் 06	வெளியீடுகள் 01

* கெஞ்சே ஏ., ஹேரத் எஸ். மற்றும் வெலன்சியா எம். (2018) - ஆங்கில மொழி கற்பிப்பதிலுள்ள சிறப்புரிமைகளும் மட்டுப்பாடுகளும் தொடர்பில் ஆராய்தல் : மாறுபட்ட மூன்று கல்வியாளர்களின் இனம் தொடர்பிலான கற்கை . யசான் பீ, ரெடல்ப் என். (கல்வி) - தர்க்க ரீதியில், ஆசிரியர் அடையாளம் மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் சமத்துவம் / சமத்துவமின்மை : பிரச்சினைகளும் உட்சிக்கல்களும் (பக்க இலக்கம் 237-256) டோர்ரேஜ்ட், நெதர்லாந்து : ஸ்பிரிங்கர்

- ஹேரத் எஸ். (2018) - மொழிக்கல்வி ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தி : மாற்றமடையும் விடயநோக்கெல்லை மற்றும் செயற்பாட்டு ரீதியிலான ஆராய்ச்சி பணிகள். ஹேரத் எஸ். மற்றும் ஸ்மித் ஐ. (கல்வியியலாளர்கள்) - செயற்பாட்டு ஆராய்ச்சி மற்றும் ஆசிரிய கல்வியியலாளர்களின் தொழில்சார் அபிவிருத்தியின் பணிகள் (பக்க இலக்கம் 10-18) கொழும்பு : பிரிட்டிஷ் கவுன்சில்

- ஹேரத் எஸ். மற்றும் ஸ்மித் ஐ. (கல்வியியலாளர்கள்) - (2018). செயற்பாட்டு ஆராய்ச்சி மற்றும் ஆசிரிய கல்வியியலாளர்களின் தொழில்சார் அபிவிருத்தியின் பணிகள் - கொழும்பு : பிரிட்டிஷ் கவுன்சில்

- ரம்புக்வெல்ல எச். (2018) மெய்யான அரசியலும் கவிதை வடிவமும் : சிங்கள தேசியத்தின் கலாசாரம் ஒன்றான வம்சாவழி - லண்டன் - யுனிவர்சிட்டி கொலெஜ் லண்டன் பிரஸ் .

- ரம்புக்வெல்ல, ஹர்ஷன - (2018) - "தரப்படுத்தப்பட்ட மொழி, கிரிக்கட், தேசிய வாதம் மற்றும் எழுத்தின் ஆதிக்கம் : எழுத்தின் ஆதிக்கம் : எழுத்துமூலமான பதங்களின் தர்க்க நிலை". பதிப்பு - கொன்சடன்ஸ் வெத் மற்றும் கஸ்பர் ஜூப்பர்மன்ஸ். லண்டன் பூலூம்ஸ்பெரி .

- ரம்புக்வெல்ல ஹர்ஷன - (2018) - காலனி ஆதிக்கத்தின் பின்னரான தேசியம் . "இலங்கையில் கலாசார சீர்கேடு தொடர்பிலான ஆராய்ச்சி" - எல்லைகள் 2 : இலக்கியம் மற்றும் கலாசாரம் பற்றிய சருவதேச சஞ்சிகை 45(4). டியுக் யுனிவர்சிட்டி பிரஸ் .

- விஜேசேக்கர . எச்.டி., எல்பேட் . ஜே., எம்.ஜி. மியூ - (2018) - இன ரீதியில் பிரிக்கப்பட்ட பாடசாலை முறைமைகளில் நிலவும் மனநிலை பற்றிய பழக்கங்களை உள்வாங்குதல். - இலங்கையில் பல்லின இருமொழி கல்வி அறையொன்றில் பாடங்கள் - கல்வி பற்றிய சருவதேச சஞ்சிகை Doi.org/10.1080/13603116.2018.1514730

- விஜேசேக்கர . எச்.டி., இலங்கையில் பல் இன, இருமொழி கல்வி வகுப்பறையில் மாணவர்களின் பல் மொழி தேர்ச்சி ஆற்றல் பற்றிய அடையாளம் - முதுமானி ஆய்வுக் கட்டுரை QUT - https://eprints.qut.edu.au/119217

❖ **மாநாடுகள் / செயலமர்வுகளில் செய்யப்பட்ட முன்வைப்புகள்**

- ஹேரத் எஸ். - (2018). மொழியியலின் உட்பக்கத்திலிருந்து மொழி நல்லிணக்கம் வரை : அடையாளம் தொடர்பில் உள்ளக ரீதியில் புரிந்து கொள்வதற்காக வாய்ப்பினை உருவாக்குதல் - சமூக மொழியியல் சங்கம் ஒக்லண்ட் - நியூசிலாந்து

- ஹேரத் எஸ். - (2018). காலனித்துவம் , சுதந்திரம் , சிவில் யுத்தம் மற்றும் சமாதானம் நிலவிய காலப்பகுதியின் ஊடாக மொழிக் கொள்கையை பிரகடனப்படுத்தல் - புதிய அடையாளம் சார்பில் வாய்ப்பு நிலவுகின்றதா? சமூக மொழியியல் சங்கம் 22. ஒக்லண்ட் - நியூசிலாந்து

- ஹேரத் எஸ். வத்துகே சி. - (2018). - கலாசார போக்கிலிருந்து கலாசார நல்லிணக்கம் வரை : அடையாள ஆராய்ச்சிக்கான படைப்பு ரீதியிலான அனுகுகை - ஆற்றுகை கலை, நல்லிணக்கம் மற்றும் கற்கை : இலங்கை - இலங்கை - நோர்வே இசை சங்கத்தின் எட்டு வருட கால நிறைவு - கொழும்பு இலங்கை

- ஹேரத் எஸ். (2018) தரம்மிக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் - பட்டப்பின் படிப்பு கல்வி பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

- ஹேரத் எஸ். (2018) ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான தரம்மிக்க அனுகுகை - கலைப் பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

- ரணசூரிய டி. மற்றும் ஹேரத் எஸ். (2018) - துறைசார்பில் உண்மையாக தேவைப்படுவது என்ன? தொழில்பயிற்சி பட்டதாரிகளின் ஆங்கில மொழி தேர்ச்சி பற்றி இந்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கிட்டிய பரிசோதனை - சருவதேச திறந்த பல்கலைக்கழக ஆராய்ச்சி கருத்தரங்கு, - கொழும்பு , இலங்கை

- ஜான்ஸ் எம்.ஐ. (2018) - விளம்பரப்பட முன்வைப்பு - 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் யோர்க் சாந்த ஜோனில் BAAL இல் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையில் முதல் மொழியாக ஆங்கிலம் பேசுபவரின் பிரச்சினைகள்.

- ரம்புக்வெல்ல எச். (2018) முழுமையான உரை. - சிங்களமொழி கருத்தரங்கு சிங்கள மொழி திணைக்களம் , கொழும்பு பல்கலைக்கழகம்

- விஜேசேக்கர . எச்.டி., - (2018) குழு உறுப்பினர் / முன்வைப்பாளர் LLTT SIG சங்கம் AARE: பல் இன வகுப்பறையில் மொழியினை ஊக்குவிப்பதன் மூலம் சமத்துவத்தை மேம்படுத்துதல் . LLTT

SIG சங்கம் 2 - வரையறுக்கப்பட்ட கல்வி நிலையில் ஆசிரியர்களின் இடம் - அவுஸ்திரேலியா கல்வி ஆராய்ச்சி சங்கத்தின் சருவதேச மாநாடு 2018 திசெம்பர் 2-6, சிட்னி பல்கலைக்கழகம்.

❖ **பரிசுகளும் மானியங்களும்**

- ஜான்ஸ் எம்.ஐ. - கிறிஸ் பேர்ம்பிட் மாணவர் / புலமை பரிசில்தாரர் BAAL - 2018
- ஜான்ஸ் எம்.ஐ. - சிறந்த விளம்பரபடம் - BAAL - 2018
- ரம்புக்வெல்ல எச்.எஸ். - ஆராய்ச்சி பரிசு 2017 - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- விஜேசேக்கர . எச்.டி., - ஆய்வுக் கட்டுரைக்கான விசேட பாராட்டு - இலங்கையில் "பல் இன அடையாளம் இருமொழி கல்வி வகுப்பறையொன்றில் மாணவர்கள்" என்னும் தலைப்பிலான முதுமானி ஆய்வுக் கட்டுரை - 2018 கல்வி பீடம், தொழினுட்ப குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
- ஹேரத் எஸ்.எம் ரம்புக்வெல்ல எச்.எஸ். - முதன்மை ஆய்வாளர்கள் - இலங்கையில் கலைகள் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்காக பிரிட்டிஷ் கவுனிசிலின் 5,000,000.00 ரூபா நன்கொடை.
- ஹேரத் எஸ்.எம் - இலங்கை - நோர்வே இசை ஒத்துழைப்பு .

மேற்போந்த வெளியீடுகளுக்கு , முன்வைப்புகளுக்கு , விருதுகளுக்கு மேலதிகமாக சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்காக கைப் பிரதிகளை மீளாய்வு செய்தல், ஆராய்ச்சி கலந்துரையாடல்களில் முன்வைப்பதற்கான பத்திரங்களை மீளாய்வு செய்தல் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் நடாத்துதல் போன்ற ஆராய்ச்சி சார்ந்த வேறு செயற்பாடுகள் பலவற்றுக்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் பங்களிப்பினை நல்கியது.

❖ **உடனுழைத்தல் மற்றும் பங்குடமை**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதவியணி அபிவிருத்தி நிலையமானது அதன் பதவியணி சார்பில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கற்பித்தல், மதிப்பிடல் உட்பட ஒருங்கிணைப்பு போன்ற உதவிகளை வழங்கியது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக்கல்வி பிரிவு, கொழும்பு, களனி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களின் கல்விப் பீடங்கள் மற்றும் ஆங்கிலமொழி கல்விப் பிரிவு என்பவற்றுக்கு கற்பித்தல், மதிப்பிடல் மேற்பார்வை மற்றும் பரீட்சை உதவிகளை வழங்கியது. அதேபோன்று தேசிய பல்கலைக்கழகங்கள் பலவற்றில் மாநாடுகள் மற்றும் செயலமர்வுப் பணிகள் சார்பிலும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் ஒத்தாசையை வழங்கியது. தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி அமைச்சின் ஆங்கிலமொழி மற்றும் வெளிநாட்டு மொழி திணைக்களம் உட்பட கல்வி அமைச்சின்

இருமொழி பிரிவு என்பனவும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிபுணத்துவ அறிவின் மூலம் நன்மைகள் பெற்றுக் கொண்டன. கற்பித்தலுக்குரிய இந்த செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்காக கற்றலுக்கான அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து கொண்டதுடன் அதன் பொருட்டு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கல்விப் பிரிவின் கல்விசார் பதவியணி உறுப்பினர்களினால் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பல்வேறுபட்ட பணிகளுக்கு அவர்களுடைய தொடர்ச்சியான ஒத்தாசையினை வழங்கினர். இத்தகைய ஒத்தாசையின்றி முதுமானி பட்ட மட்டத்திலான ஆராய்ச்சி மேற்பார்வை இலகுவான பணியொன்றாக அமைந்திருக்காது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு இலங்கை திறந்த பல்லைக்கழகத்தின் மொழிக் கல்விப் பிரிவின் பதவியணியினரும் அக்கறையுடன் ஒத்தாசைகளை வழங்கினர்.

2018 ஆம் ஆண்டு முழுவதும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பெரும்பாலானோரினதும் அதேபோன்று அதன் நிறுவனங்களினதும் ஒத்தாசை கிடைக்கப்பெற்றதோடு, துணைவேந்தர் , இலங்கை திறந்த பல்கலைக்கத்தின் பீடசபை உறுப்பினர்கள் , பிரதி துணைவேந்தர், பதிவாளர், மனிதவள மற்றும் சமூகவியல், கல்வி பீடங்களின் பீடாதிபதிகள் , நிதிப் பொறுப்பாளர்கள் , நூலகர்கள், நூலக பதவியணியினர்கள், கல்விப் பிரிவின் பிரதி பதிவாளர்கள் மற்றும் கல்வி தொழினுட்பவியல் பிரிவின் கல்வி பதவியணியினர் ஆகியோர்களை குறிப்பிடலாம்.

03. முகாமைத்துவமும் நிருவாக முன்னேற்றமும்

மீளாய்வு ஆண்டில் முகாமைத்துவம் மற்றும் நிருவாக ரீதியிலான பணிகள் தொடர்புபட்ட சுருக்க விபரம் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

(அ) நிருவாக பதவியணி உறுப்பினர்கள் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டனர்.

திரு.டபிள்யு.டி.ரீ.திலகரத்ன - ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சிரேட்ட உதவி பதிவாளர்

* 2018 மார்ச் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிவரை தாய்லாந்தில் நடாத்தப்பட்ட முகாமைத்துவம் பற்றிய சருவதேச நிகழ்ச்சித்திட்டம்.

நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் எண்ணக்கரு பற்றிய ஆற்றலையும் அறிவினையும் விருத்தி செய்து கொள்வதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டமைக்காக நிறுவனத்தினால் சிரேட்ட உதவிப் பதிவாளருக்கு நிதி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.

(ஆ) 2019 ஆம் ஆண்டு சார்பிலான வருடாந்த திட்டமிடல் இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப திட்டமிடலானது நிறுவனத்தின் குழு ரீதியிலான பணிகளை கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் வசதியினை வழங்கும் பொருட்டு 2018 திசெம்பர் 24 ஆம் திகதி சேவை நிலையத்திற்கு வெளியே மேற்கொள்ளப்பட்டது அதன் பின்னர், இந்த செயற்பாட்டின் இரண்டாவது பகுதி ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டது.

(இ) ஆர்வ வெளிப்படுத்தல்களை பரிசீலனை செய்வதற்கும் பின்வரும் பணிகளுக்கு அளவை ஆய்வு மற்றும் திட்டங்களை வரைவதற்குமாக இணக்கப்பேச்சுக் கூட்டங்களும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

* முகாமைத்துவ தகவல் முறைமை - ஆர்வ வெளிப்படுத்தல்கள் கோரப்பட்டதோடு, உரிய தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக அவை ஆராயப்பட்டன.

* மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் விருத்தியும் - கேள்வி கோரும் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு கூரையின் உச்சி மற்றும் வாகனத் தரிப்பிடம் உட்பட சேவை பிரதேசம் என்பற்றுக்கான திட்டமிடல் மற்றும் உரிய தகவுதிறன்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

(ஈ) புதிய கட்டடத்திற்குரிய பணிகள்

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட முறைக்கேடுகள் தொடர்பிலான பட்டியல் மூலம் இனங்காணப்பட்ட முறைக்கேடுகளை சீர்செய்வதற்கு ஒப்பந்தக்காரர் தொடர்ந்தும் தாமதப்படுத்தியமை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கட்டட குழு கூட்டங்களும் ஒப்பந்தக்காரர்களுக்கும் உயர் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான பலசுற்று பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டன. இது சம்பந்தமாக நிலவும் முன்னேற்றம் தொடர்பில் பல்கலைக்க மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி அமைச்சிற்கும் ICTAD நிறுவனத்திற்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினைத் தயாரிக்கும் பணிகள் சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, குறித்த ஆண்டின் மார்ச் மாத நடுப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டு 2018-06-22 ஆம் திகதியன்று 104 ஆம் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. உயர் கல்வி அமைச்சினால் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது 2018-04-25 ஆம் திகதி கலந்துரையாடி பொறுப்பேற்கப்பட்டது.

(ஊ) 2018-2021 திறமுறை முகாமைத்துவ திட்டங்களை தயாரித்தல்

2018-2021 திறமுறை முகாமைத்துவ திட்டங்கள் 2019-01-25 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதோடு, இது 2018-05-03 ஆம் திகதியன்று 103 ஆவது முகாமைத்துவ சபைக்கு உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டது.

➢ உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றம்

தளபாடங்கள், உபரகணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை சுவீகரித்தல்

2017 ஆம் ஆண்டின் இறுதியில் புதிய கட்டடத்திற்கான மின் உயர்த்தி, மின்பிறப்பாக்கி என்பன வழங்கி, பொருத்தி தரப்பட்டதோடு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கட்டடத்திற்கும் அதன் பணிகளுக்கும் மிகச் சிறந்த தரம்மிக்க சேவையினை வழங்கி செயற்படுகின்றன. முக்கியமாக வலதுகுறைந்தோர் சார்பில் உள் நுழைவதற்கும் நடப்பதில் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் பதவியணியினருக்கும் மின் உயர்த்தி அத்தியாவசியமான ஒரு அங்கமாகும்.

மீளாய்வு ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளுக்குரிய எவ்வித புதிய கொள்வனவுகளும் செய்யப்படவில்லை. ஆயினும், பின்வருவன கொள்வனவு செய்யப்பட்டன.

* நூலகத்திற்கான புத்தகங்கள்
* பதவியணியினரின் பாவனைக்காக கற்பித்தல் உபகரணங்களும் தளபாடங்களும்

- **2018 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு ஒத்தாசை நல்கிய வெளிவாரி பதவியணியினர்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கத்தின் கல்வி, நிருவாக மற்றும் கல்விசாரா பதவியணியினர் உட்பட ஏனைய தேசிய பல்கலைக்கங்களினால் வழங்கப்பட்ட ஒத்தாசை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நன்றியறிதலுடன் நினைவுகூருகின்றது. இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் பாடநெறிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்திச் செல்கையில் பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரி தொழில்சார்பாளர்கள் பலர் வழங்கும் உதவியினையும் இந்த சந்தர்ப்பத்தில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நன்றியறிதலுடன் நினைவுகூருகின்றது. . இந்த ஒத்தாசைகள் இல்லாவிட்டால் நிறுவனத்திற்கு இவ்வாறு இயங்குவது கடினமாக இருந்திருக்கும். இத்தகைய ஒத்தாசைகள் மூலம் அதன் மாறுபட்ட, பரந்துபட்ட வாடிக்கையாளர் வலையமைப்புக்கு உயர் தரம் மிக்க சேவையினை வழங்குவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமானதென்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

பின்வரும் பட்டியலும்கூட இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களின் கல்விமான்களின் நிபுணத்துவ அறிவினை பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் மேற்கொள்ளும் தேசிய பணி தொடர்பில் காட்டுகின்ற முக்கியத்துவத்தைக் குறிப்பிடலாம்.

இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான கலைமானி பட்டம்

பெயர்	இணை நிறுவனம்
ஓய்வுநிலை பேராசிரியர் ரிஹானா ரஹீம்	மொழிக் கற்கை கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பேராசிரியர் மகேஷ்வர குருக்கள் சரவணபவ ஐயர்	ஆங்கிலமொழி கற்பித்தல் கல்விப் பிரிவு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
ஓய்வுநிலை பேராசிரியர் சந்திரா குணவர்தன	கல்வீப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட	ஓய்வுநிலை பேராசிரியர் கொழும்பு பல்கலைக்கழகம்
ஓய்வுநிலை பேராசிரியர் சிரோமி பெர்ணாண்டோ (காலஞ்சென்ற)	ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு, கொழுப்பு பல்கலைக்கழகம்
பேராசிரியர் தில்ருக்ஷி சேனாரத்ன	ஆங்கிலமொழி கற்பித்தல் கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்த	மொழிக் கற்பித்தல் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி பிரதீப் பீரிஸ்	அரசியல் விஞ்ஞான, அரச கொள்கை கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி டி.ஈ.தேவந்திர	மொழிக் கற்பித்தல் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி ராதிகா த சில்வா	மொழி கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி விவிமரி வெண்டர்பூட்டன்	மொழிக் கற்பித்தல் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி ஆஷா அபேசேக்கர	பட்டப்பின் படிப்பு பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி ரொமோலா ரசூல்	ஆங்கிலமொழி கற்பித்தல் கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
கலாநிதி சித்ரா ஜயதிலக்க	ஆங்கில மொழிப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி வகிஷா குணசேக்கர	நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை கல்விக்கான அமெரிக்க நிறுவனம்
திருமதி கௌசல்யா பெரேரா	ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
திரு.சனத் ஜே.குணவர்தன	மொழிகல்விப் பிரிவு, மொறட்டுவை பல்கலைக்கழகம்
திரு.திலின ஐ.விக்ரமாராச்சி	ஆங்கிலமொழி கற்பித்தல் கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
திருமதி மஹிஷி ரணவீர	ஆங்கிலமொழி கற்பித்தல் களனி பல்கலைக்கழகம்
திருமதி நதீன் வன்னியசிங்கம்	இனம்சார் கல்விக்கான சருவதேச நிலையம்
திருமதி சிவானி இலங்ககோன்	ஆங்கிலமொழி கற்கை கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
திருமதி திலினி வலிசுந்தர	ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
திருமதி சுமுது அம்போகம	அழகியற்கலை பல்கலைக்கழகம்
திருமதி.கேத்தகி நாகஹவத்த	ஆங்கிலமொழி கற்பித்தல் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்

இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்

பெயர்	இணை நிறுவனம்
ஓய்வுநிலை பேராசிரியர் ரிஹானா ரஹீம்	மொழிக் கற்கை கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட	ஓய்வுநிலை பேராசிரியர் அரசியல் விஞ்ஞான, அரச கொள்கை கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
ஓய்வுநிலை பேராசிரியர் சந்திரா குணவர்தன	கல்வீப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பேராசிரியர் நிலூவர் த மெல்	ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே	ஆங்கிலமொழிப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி எஸ்.லியனகே	பட்டப்பின் படிப்பு பீடம் அழகியற்கலை பல்கலைக்கழகம்
கலாநிதி பிரபா மனுரத்ன	ஆங்கில கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
கலாநிதி பி.பீரிஸ்	அரசியல் விஞ்ஞான, அரச கொள்கை கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி வகிஷா குணசேக்கர	நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை கல்விக்கான அமெரிக்க நிறுவனம்
திருமதி கௌசல்யா பெரேரா	ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி சித்ரா ஜயதிலக்க	ஆங்கிலமொழி கற்கை பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி தினாலி தேவேந்திர	ஆங்கிலமொழிப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி சசிகலா அஸ்சல்ல	ஆங்கிலமொழிப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
கலாநிதி விவிமரி வெண்டர்பூட்டன் மெத்தேவத்தேகெதர	மொழிக் கற்பித்தல் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
திருமதி சுனிலா கலப்பதி	பரிசு பெற்ற ஆசிரியர், லண்டனில் அமைந்துள்ள றோயல் சேக்ஷ்பியர் கம்பனியின் முன்னாள் நாடக ஆலோசகர்
திருமதி நதீன் வன்னியசிங்கம்	இனம்சார் கல்விக்கான சருவதேச நிலையம்

திருமதி தினாலி பெர்ணாண்டோ	ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
திரு.என்டி சூபர்ட்	மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
திருமதி ஆன்மரி த சில்வா	இனம்சார் கல்விக்கான சருவதேச நிலையம்
திரு.ஆரியவன்ச ரனவீர	பரிசுபெற்ற நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், களனி பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரிலான விரிவுரையாளர்
திரு.லால் மெதவத்தே கெதர	மொழிக் கற்பித்தல் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
திருமதி மதுபாஷினி ரத்நாயக்க	ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி அமரகீர்த்தி லியனகே	கல்வி மொழிப் பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம்
திருமதி பார்வதி நாகசுந்தரம்	முன்னைய தேசிய கல்வி நிறுவனம்
திருமதி ரஹானி பெரேரா	ஆங்கில மொழிப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்

4. நிலைபேறுடைய அபிவிருத்திக்கான எதிர்கால எதிர்பார்ப்புகள் தொடர்பிலான அறிக்கை

ஐக்கிய நாடுகளினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களின் 13 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பவற்றை குறைப்பதற்காக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. இந்த பொறுப்புக்கு அமைவாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம் அதன் படிவுத்தாள் அச்சுப் பணிகளை குறைப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் பிரதி எடுத்தல் பணிகள் உட்பட நிருவாக மற்றும் கல்வி பணிகளும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் மதிப்பிடப்பட்டு அச்சுப் பணிகளை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளக தொடர்பாடல் நடவடிக்கைகள் மின்னஞ்சல் மற்றும் கூகுல் கலண்டர் போன்றவை இணையத்தின் இயக்க கட்டுப்பாட்டு முறைமைகள் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் அறிக்கைகளை பேணும் நோக்கத்திற்காக மாத்திரம் குறிப்பு பத்திரம் போன்றவை அச்சிடப்படுகின்றன. அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தாளின் இரு பக்கத்திலும் அச்சிடப்படுவதோடு, ஒப்படைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றை சமர்ப்பிக்கும் போது ஒரு தாளின் இரு பக்கமும் அச்சிடப்பட்ட ஆவணங்களாக கையளிக்குமாறு மாணவர்களுக்கு கடுமையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடதாசி பாவனை மற்றும் அச்சுப் பணிகள் போன்றவற்றை மேலும் குறைக்கும் நோக்கில் மாணவர் முகாமைத்துவம் உட்பட ஏனைய நிருவாக பணிகள் இணையத்தின் இயக்க கட்டுப்பாட்டின் ஊடாக மேற்கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதோடு, அதன் பொருட்டு அபிப்பிராய வெளிப்படுத்தல்களும் கோரப்பட்டுள்ளன. சூரிய வெளிச்சரம் ஆகக் கூடியதாக கிடைக்கும் விதத்தில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு செயற்கை ரீதியில் ஒளியூட்டுதல் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஆகக்குறைந்த குளிரூட்டல் தேவையை கொண்டவாறு கட்டடங்கள் காற்றோட்டம் உள்ளதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக சுற்றாடல் நட்புறவு மிக்கதாக கழிவு பொருட்களை இடுவதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு கழிவு பொருட்களின் தன்மைக்கேற்ப வேறுபடுத்தும் வழிமுறையொன்று ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. கொள்கை ரீதியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகமானது அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்ரிக் கோப்பைகள் அல்லது பீங்கான்கள் என்பன பயன்படுத்தாததோடு, உயிரியல் உற்பத்திகள், மீள் பாவனையுடன்கூடிய கண்ணாடி குவளைகள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் போன்றவற்றை மாத்திரம் பயன்படுத்துகின்றது. சுற்றாடலுக்கு பாதிப்பினை செலுத்தும் அப்புறப்படுத்தும் தண்ணீர் போத்தல்களை குறைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு தண்ணீர் வழங்கும் பொறி (Water Dispenser) உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

5. திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்று (புதிய படிவத்திற்கு அமைவாக)

(அ) மீண்டுவருஞ் செலவுகள் பற்றிய விபரம்

விடயம்	2017 ரூபா	2018 ரூபா
அ. தனிப்பட்ட வேதனாதிகள்	15,416,958.00	20,571,071.58
ஆ. பிரயாணச் செலவு	94,331.00	824,529.39
இ. வழங்கல்	974,909.00	706,220.54
ஈ. பராமரிப்பு	260,348.00	652,923.81
உ. ஒப்பந்த சேவைகள்	1,454,608.00	1,404,754.48
ஊ. பிற	4,880,962.00	5,461,528.17
மொத்தம்	**23,082,116.00**	**29,621,027.97**

(ஆ) மூலதன செலவுகள் பற்றிய விபரம்

விடயம்	2017 ரூபா	2018 ரூபா
அ. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு	4,565,245.00	134,900.01
ஆ. இயந்திரசாதனங்களின் கொள்வனவு	7,878,631.00	-
இ. நூலகப் புத்தகங்களின் கொள்வனவு	211,280.00	213,703.00
ஈ. கட்டடங்கள் மற்றும் நிருமாணிப்புகளை பெற்றுக் கொள்ளல்	1,190,330.00	-
உ. பிற	5,661,631.00	21,500.00
மொத்தம்	**19,507,117.00**	**370103.01**

(இ) நிதி முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவுகள்)

விடயம்	2018 நிதி ஏற்பாடு ரூபா	2018 செலவுகள் ரூபா	சேமிப்பு / மிகை ரூபா
அ. கருத்திட்டங்கள் தவிர மீண்டுவரும் செலவுகள்	21,400,000.00	29,621,027.97	(8,221,027.97)
ஆ. கருத்திட்டங்கள் தவிர மூலதன செலவுகள்	0.00	370,103.01	(370,103.01)
இ. கருத்திட்டங்கள் - உள்நாட்டு நிதி	-	-	-
ஈ. கருத்திட்டங்கள் - வெளிநாட்டு நிதி	-	-	-
மொத்தம்	**21,400,000.00**	**29,991,130.98**	**(8,591,130.98)**

(ஈ) நிதிக்கூற்று பற்றிய விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

விடயம்	2018 நிதி ஏற்பாடு ரூபா	2018 சேர்க்கப்பட்ட ரூபா	சேமிப்பு / மிகை ரூபா
அ. பட்டப் படிப்பு	-	-	-
ஆ. பட்டப்பின் படிப்பு	8,645,000.00	12,717,969.00	4,072,969.00
இ. ஆலோசனை சேவைகள்	-	-	-
ஈ. பிற	-	-	-
மொத்தம்	**8,645,000.00**	**12,717,969.00**	4,072,969.00

(உ) நிதி செயற்பாடு பற்றிய ஆய்வு

விடயம்	கட்டமைப்பு	மாணவர் ஒருவருக்கான செலவு ரூபா
அ. மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவு	பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	79,593.51
ஆ. மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவு	சான்றிதழ் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	1,276.22
மொத்தம்	-	80,869.73

6. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

உள்ளக கணக்காய்வு அறிக்கை - 2018

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் குறித்த இந்த மீளாய்வு ஆண்டினுள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினதும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினதும் பெரும்பாலான பகுதிகளைத் தழுவி மேற்கொண்ட அதன் கணக்காய்வுப் பணிகள் பின்வருமாறாகும்.

1. முன் கணக்காய்வு

* பல்கலைக்கழக சேமலாப நிதியத்தை விடுவித்தல்
* பணிக்கொடை கொடுப்பனவு
* ஓய்வூதிய நிதியங்களை விடுவித்தல்
* ஒப்பந்த மற்றும் பிடித்து வைத்தல் தொடர்பிலான கொடுப்பனவுகளை முடிவுறுத்துதல்

2. கண்டுபிடிப்புகள் மீதான கணக்காய்வு விசாரணைகள்

1. 3 Phase தானியங்கி டீசல் மின்பிறப்பாக்கி சார்பிலான கணக்காய்வு - OUSL/IAD/AR/2018/PGIE/01
2. 2017 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட பேரேட்டுக் குறிப்புகள் மீதான கணக்காய்வு - OUSL/IAD/AR/2018/PGIE/02

3. கணக்காய்வுக் குழு

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கான கணக்காய்வுக் குழுவானது கூட்டப்படும். உள்ளக கணக்காய்வினால் தொடர்புபடுத்தப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள், கணக்காய்வு விசாரணைகள் மற்றும் இந்த கணக்காய்வு விசாரணைகளுக்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பதில்கள் இந்தக் குழுவினால் பரிசீலனை செய்யப்படுவதோடு, இது தொடர்பிலான சிபாரிசுகளை செய்வதும் மற்றும் சீர்படுத்துகைகளுக்கான கட்டளைகளை மேற்பார்வை செய்வதும் இந்தக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த மீளாய்வு ஆண்டினுள் கணக்காய்வுக் குழுவானது நான்கு தடவைகள் கூடியுள்ளன.

4. பதவியணி

உள்ளக கணக்காய்வுக் குழுவானது பின்வரும் பணியாட்டொகுதியைக் கொண்டுள்ளது.

* சிரேட்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் திகதியிலிருந்து } 2018.10.01 ஆம்
* உதவி உள்ளக கணக்காய்வாளர்
* கணக்காய்வு உதவியாளர் ஒருவர்
* எழுதுநர்
* கணனி பிரயோக உதவியாளர்
* தொழிலாளர்.

7. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி நிலைமை பற்றிய அறிக்கை

		2018 ரூபா	2017 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்	குறிப்பு		
வங்கியிலுள்ள பணம்	1	2,088,525.26	11,420,3620.25
பதவியணியினருக்கான கடன் மற்றும் முற்பணம்	2	1,193,181.00	1,216,377.00
மாணவர்களிடமிருந்து வரவேண்டியவை	3	7,441,127.00	5,065,653.00
குறுகியகால முதலீடு	4	47,931,800.00	46,761,464.04
பொருட் பதிவேடு		701,099.45	313,295.85
முற்கொடுப்பனவுகளும் வரவேண்டியவைகளும்	5	80,317.20	36,146.23
		59,436,049.91	**64,813,298.37**
நடைமுறைச் சாரா சொத்துக்கள்	6		
தளபாடங்களும் பொருத்துகைகளும்		3,420,856.55	3,134,435.69
அலுவலக உபகரணங்கள்		1,763,329.83	2,294,814.72
நூலக புத்தகங்களும் பருவ சஞ்சிகைகளும்		606,382.08	593,703.93
கணனி மற்றும் துணைக் கருவிகள்		4,479,716.25	5,614,329.01
துவிச்சக்கரவண்டி		3,000.00	4,000.00
பட்டமளிப்பு விழா மேலங்கி		1,312.00	5,512.00
பிற சொத்துக்கள்		16,857.11	30,348.41
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்		6,192,542.23	7,740,677.79
காணி			-
கட்டடங்கள்		80,225,382.19	84,804,933.37
கட்புலனாகா சொத்துக்கள்	7	**364,991.78**	482,992.78
		97,074,370.02	**104,705,746.70**
மொத்த சொத்துக்கள்		**156,510,419.93**	**169,519,045.07**
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
திரண்ட செலவுகள்	8	1,601,942.52	1,532,305.79
ஆராய்ச்சி - திரண்ட மானிய		233,338.39	-
சிறு கடன் கொடுத்ததோர்	9	561,113.04	2,875,061.12
முன்னதாகவே செலுத்தப்பட்ட மாணவர் கட்டணம்	10	6,614,775.00	3,786,136.00
நிருமாணிப்பின் மீது வைத்திருப்புத் தொகை		2,011,358.70	2,011,358.70
முற்பணத்திற்கான வட்டி		129,887.78	288,403.81
		11,152,415.43	**10,493,265.42**
நடைமுறைசாரா பொறுப்புகள்			
பணிக் கொடைக்கான நிதி ஏற்பாடுகள்	11	2,162,203.00	1,703,629.98
மொத்தப் பொறுப்புக்கள்		**13,314,618.43**	**12,196,895.40**
தேறிய சொத்துக்கள்		**143,195,801.50**	**157,322,149.67**

தேறிய பொறுப்புக்கள் / உரிமை முதல்			
மூலதன கொடை - செலவு செய்யப்பட்டவை	12	99,186,300.57	107,543,179.60
மூலதன கொடை - செலவு செய்யப்படாதவை	13	-	17,189,312.11
காணி மதிப்பீட்டு ஒதுக்கம்		-	-
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அபிவிருத்தி நிதியம்		3,967,500.10	3,967,500.10
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது ஒதுக்கம்		36,695,745.95	28,622,157.86
ஆராய்ச்சி மானியம்		3,346,254.88	-
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்		**143,195,801.50**	**157,322,149.67**

பக்க இலக்கம் 5 இலிருந்து 7 வரை குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிடல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 8 இலிருந்து 16 வரையிலுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றின் பகுதியாகும். இந்த நிதி அறிக்கையை தயாரித்தல், முன்வைத்தல் என்பன தொடர்பில் முகாமைத்துவ சபையானது பொறுப்புக் கூறும். இந்த சபையினால் குறித்த நிதிக் கூற்றானது அங்கீகரிக்கப்பட்டதோடு, சபை சார்பில் கைச்சாத்திட்டப்பட்டுள்ளது.

கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல
பணிப்பாளர்

முகாமைத்துவ சபை உறுப்பினர்

முகாமைத்துவ சபை உறுப்பினர்

திரு.டபிள்யு.டி.ரீ.திலகரத்ன
சிரேட்ட உதவி பதிவாளர்

திருமதி எஸ்.எம்.பீ.ஏ.சுபானி
பிரதி நிதிப் பொறுப்பாளர்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

		2018 ரூபா	2017 ரூபா
வருமானம்	**குறிப்பு**		
அரசாங்கத்தின் மீண்டுவரும் கொடை		21,400,000.00	18,727,098.00
விண்ணப்ப கட்டணம்		210,500.00	233,000.00
பதிவுக் கட்டணம்		230,200.00	229,525.00
மேலதிக வகுப்புக் கட்டணம்		8,214,605.00	7,448,475.00
பரீட்சைக் கட்டணம்		1,553,520.00	365,790.00
மேலதிகக் கட்டணம்		153,500.00	157,800.00
ஆய்வுக் கட்டுரை கட்டணம்		1,542,644.00	1,376,039.00
துறைசார் கட்டணம்		11,000.00	72,000.00
குறுகிய பாடநெறிகளுக்கான மேலதிக வகுப்புக் கட்டணம்		802,000.00	3,076,400.00
வட்டி வருமானம்	14	4,510,832.28	4,611,991.22
நானாவித வரவேண்டியவை		314,488.61	170,560.37
மூலதன நன்கொடை இலதாக்கல்		8,356,879.03	5,633,157.48
மீள்மதிப்பீட்டு மிகை		459,294.21	-
மொத்த வருமானம்		**47,759,463.13**	**42,101,836.07**
செலவுகள்			
தனிப்பட்ட வேதனாதிகள்	15	20,571,071.58	15,416,958.14
பிரயாணச் செலவு	16	824,529.39	94,331.00
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்டுகள்	17	706,220.54	974,908.69
பராமரிப்பு செலவுகள்	18	652,923.81	260,347.97
ஒப்பந்த சேவைகள்	19	1,404,754.48	1,454,608.31
பிற திரண்ட செலவுகள்	20	5,461,528.17	4,880,962.39
பெறுமானத் தேய்வு		8,356,879.03	5,658,457.48
பணிக்கொடைச் செலவு		458,573.02	546,516.98
கட்புலனாகா சொத்துக்கள் இலதாக்கல்		118,000.00	107,008.22
மனிதவள மூலதன செலவுகள்		369,000.00	168,000.00
மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை		-	2,428,961.92
மொத்த செலவு		**38,923,480.02**	**31,991,061.10**
காலப் பகுதிக்கான சேமிப்பு / (பற்றாக்குறை)		**8,835,983.11**	**10,110,774.97**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமை முதல் மாற்றங்கள் பற்றிய கூற்று

	ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது ஒதுக்கம்	பிற நிதியம்	செலவு செய்யப்பட்ட மூலதன கொடை	செலவு செய்யப்படாத மூலதன கொடை	மொத்தம்
2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை	18,504,151.00	3,967,500.10	92,911,214.98	35,829,434	151,212,299.93
கடந்த ஆண்டில் சீராக்கல்	7,231.89	-	-	-	7,231.89
ஆண்டில் செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை	-	-	20,265,122.08	(20,265,122.08)	-
ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி	-	-	-	1,625,000	1,625,000.00
மூலதனக் கொடை இலதாக்கல்	-	-	(5,663,157.48)	-	(5,663,157.48)
காலப் பகுதிக்கான சேமிப்பு / (பற்றாக்குறை)	10,110,774.97	-	-	-	10,110,774.97
2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை	28,622,157.86	3,967,500.10	107,543,179.58	17,189,312	157,322,149.80
கடந்த ஆண்டில் சீராக்கல்	(762,395.02)	-	-	-	-
ஆண்டில் செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை	-	-	-	(17,189,312)	-
ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி	-	-	-	-	
மூலதனக் கொடை இலதாக்கல்	-	-	(8,356,879.03)	-	
காலப் பகுதிக்கான சேமிப்பு / (பற்றாக்குறை)	8,835,983.11	-	-	-	
2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை	36,695,745.95	3,967,500.10	99,186,300.55	0	139,849,546.75

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான காசு ஓட்டக் கூற்று

	2018 ரூபா	2017 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசு ஓட்டம்		
வழமையான நடவடிக்கை மூலமான சேமிப்பு / (பற்றாக்குறை))	8,835,983.11	10,110,774.97
குறுகிய கால முதலீடுகளின் வட்டி வருமானம்	(4,510,832.28)	(4,611,991.22)
காசல்லாத செயற்பாடுகள்		
பெறுமானத் தேய்வு	8,356,879.03	5,658,457.48
பெறுமானத் தேய்வு சீராக்கல் - கடந்த ஆண்டு	10,179.14	-
பணிக் கொடை செலவுகள்	458,573.02	546,516.98
பணிக் கொடை சீராக்கல் - கடந்த ஆண்டு	-	-
மூலதன கொடை இலதாக்கல்	(8,356,879.03)	(5,633,157.48)
கட்புலனாகா சொத்துக்கள் இலதாக்கல்	118,000.00	107,008.22
கடந்த ஆண்டின் சீராக்கல்	(762,395.02)	7,231.89
மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை	(459,294.21)	2,428,961.92
கடந்த ஆண்டின் சீராக்கல் - இலதாக்கல்	-	75,116.00
செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய சேமிப்பு	**3,690,213.75**	**8,688,918.79**
செயற்பாட்டு மூலதனத்தின் (அதிகரித்தல்) / குறைவடைவு		
இருப்பு ஆவணத்தின் / (அதிகரித்தல் / குறைவடைதல்)	(387,803.60)	(216,423.96)
செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளின் அதிகரித்தல் / (குறைவடைதல்)	659,150.01	4,389,979.72
வரவேண்டிய வருமானங்களின் (அதிகரித்தல்) / குறைவடைதல்	(2,419,644.97)	(1,963,197.23)
பதவியணியின் கடன் மற்றும் முற்பணம் (அதிகரித்தல்) / குறைவடைதல்	23,196.00	(243,049.00)
பணிக் கொடை கொடுப்பனவுகள்		-
தேறிய செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசு ஓட்டம்	**1,518,719.19**	**10,656,228.29**
மூலதன செயற்படுகளின் காசு ஓட்டம்		
சொத்துக்கள் , பொறித் தொகுதிகள் , உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	(134,900.01)	(19,295,841.95)
புத்தகங்கள் மற்றும் பருவ சஞ்சிகைகளை கொள்வனவு செய்தல்	(213,703.00)	(211,279.88)
கட்புலனாகா சொத்துக்களை கொள்வனவு செய்தல்	-	(590,000.00)
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கட்டட கருத்திட்டம்	-	-
முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி	3,989,210.21	4,611,991.22
கட்டட நிர்மாணிப்பாளருக்கான கொடுப்பனவு	-	-
திட்டவட்டமான நோக்கத்திற்காக கிடைத்த நிதி	5,522,800.00	-

திட்டவட்டமான நோக்கத்திற்கான காசு ஒட்டம்	(1,943,207.00)	-
குறுகிய கால முதலீடுகளை மீளப் பெறல்	19,000,000.00	19,100,400.00
புதிய குறுகிய கால முதலீடுகள்	(19,900,000.00)	(22,861,86404)
முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த தேறிய காசு ஒட்டம்	**6,338,756.20**	**(19,246,594.65)**
முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த காசு ஒட்டம்		
திறைசேரியிடமிருந்து கிடைத்த மூலதன நிதி	(17,189,312.11)	1,625,000.00
நிதி நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த தேறிய காசு ஒட்டம்	**(17,189,312.11)**	**1,625,000.00**
காசு மற்றும் காசு சார்ந்த நிதிகளின் தேறிய அதிகரித்தல் / (குறைவடைதல்)	**(9,331,836.72)**	**(6,965,366.36)**
ஆண்டு தொடக்கத்தில் காசும் காசு சார்ந்தவையும்	**11,420,361.98**	18,385,728.34
ஆண்டிறுதியில் காசும் காசு சார்ந்தவையும்	**2,088,525.26**	**11,420,361.98**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் - 2018

விசேட கணக்கிடல் கொள்கை

01. **அறிக்கையிடும் நிறுவனம்**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது 2005 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இது 2006 ஒக்றோபர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் தற்போது பட்டப்பின் படிப்பு பாடநெறிகளும் குறுகியகால பாடநெறிகளும் நடாத்தப்பட்டு வருகின்றது.

02. **இசைவாக்கக் கூற்று**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிக் கூற்று செலவு இணக்கப்பாடு மற்றும் திரண்ட அடிப்படையின் மீது இலங்கை அரசாங்கத்தின் துறைசார் கணக்கிடல் தரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது

03. **அரசாங்கத்தின் கொடை**

இந்த ஆண்டில் கிடைக்கப் பெற்ற மொத்த அரசாங்க கொடையானது 21,400,000/- ரூபாவாகும். 21,400,000/- ரூபாவான மீண்டுவரும் கொடையானது நிதி செயலாற்றுகை கூற்றில் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. கிடைக்கப் பெற்ற மூலதனக் கொடை, செலவு செய்யப்படாத மூலதனக் கொடையின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளதோடு, செலவு செய்யப்பட்ட தொகையானது செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

	2017 ஆம் ஆண்டில் கிடைத்த தொகை (ரூபா)	செலவு செய்யப்படாத தொகை (ரூபா)
மீண்டுவரும் கொடை	21,400,000	-
மூலதனக் கொடை	-	-
	21,400,000	-

மூலதன கொடைகளின் இலதாக்கல்

மூலதன கொடை மற்றும் கிடைத்த பிற கொடைகள் மூலதனவாக்கம் செய்யப்பட்டதோடு, சார்பு சொத்துக்களின் ஆயுற் காலத்தின் மீது வருமானமாக இலதாக்கப்பட்டது.

04. **சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

(அ) இலங்கை அரசாங்க துறை கணக்கிடல் தரம் 7 இற்கு அமைவாக சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பெறுமானத் தேய்வுகள் செய்யப்பட்டுள்ளன. ஆதலால், சொத்துக்களின் பாவனைக்காக பெற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படும்.

(ஆ) வருடாந்த பெறுமானத் தேய்வு விகிதாசாரம் பின்வருமாறாகும்:

*	தளபாடங்களும் பொருத்துகைகளும்	10%
*	அலுவலக உபகரணங்கள்	20%
*	கணனி மற்றும் துணைக் கருவிகள்	20%
*	புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும்	20%
*	துவிச்சக்கர வண்டி	20%
*	பட்டமளிப்பு விழா மேலங்கி	20%
*	பிற சொத்துக்கள்	20%
*	கணனி மென்பொருள்	20%
*	கட்டடம்	5%

(இ) நடைமுறைசாரா சொத்துக்களின் மதிப்பிடப்படும் ஆயுட்காலத்தின் மீது பெறுமானத் தேய்வு வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

(ஈ) குறைந்த செலவு திறந்த பெறுமானத் தேய்வினுள் நடைமுறைசாரா சொத்துக்கள் காட்டப்படும்.

(உ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும் இந்த நிறுவனத்தின் மாணவர்களது பயன்பாட்டுக்காக திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஊ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கான கட்டடம் நிருமாணிக்கப்பட்டுள்ள காணியின் உரிமையானது இந்த நிறுவனத்திற்கு சட்டபூர்வமாக கையளிக்கப்படாமைக்கான காரணம் இது திறந்த பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமொன்றாக செயற்படுகின்றமையினாலும் இந்தக் காணியினை அதன் பொறுப்பில்

எடுப்பதற்கு நிறுவனத்தின் கட்டளைச் சட்டத்தில் சட்டபூர்வமான ஏற்பாடுகள் இல்லாமையினாலும் ஆகும். ஆயினும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 22,500/- ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ள 15 பேர்ச்சர்ஸ் விஸ்தீரணமான காணி 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றில் இலங்கை அரசாங்க துறை கணக்கிடல் தர இலக்கம் 07 இற்கு அமைவாக காணியின் பெறுமதியானது 22,500,000/- ஆக குறிப்பிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(எ) தளபாடங்கள், கருவிகள், அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் கருவிகள் அத்துடன் துவிச்சக்கர வண்டி என்பன 2018-12-31 ஆம் திகதியன்றுக்கு மீள மதிப்பிடப்பட்டுள்ளதோடு, இவ்வாறு மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் கணக்கிடப்பட்டுள்ளன.

05. குறுகியகால முதலீடுகள்

அவசர தேவைகளுக்கு தேவைப்படாத நிதி, மக்கள் வங்கியில் குறுகியகால நிலையான வைப்புகளிலும் வங்கி நடவடிக்கைகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. வருட இறுதியில் காலாவதியான வட்டி வருமானம் அடங்கலாக முதலீட்டின் தேறிய பெறுமதியாக கணக்கிடப்பட்டுள்ளது.

06. இருப்புகளை மதிப்பீடு செய்தல்

முதல் வந்து முதல் செல்லும் (FIFO) அடிப்படையினைப் பயன்படுத்தி களஞ்சியங்களிலுள்ள இருப்புகள் மதிப்பிடப்படும்.

07. பொறுப்புக்கள்

நிதிக்கூற்று தயாரிக்கும் போது சகல பொறுப்புகளும் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன.

08. வங்கியிலுள்ள பணம்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இலக்கங்கள் 174100246838310 மற்றும் 174336838310 கொண்ட நடைமுறைக் கணக்குடன் இணைக்கப்பட்டு இரண்டு சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தது ஆண்டு முழுவதும் 100,000/- ரூபா இந்த நடைமுறைக் கணக்குகளில் மீதியாக பேணப்பட்டு வந்தன.

09. கட்புலனாகா சொத்துக்கள்

கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளானது செலவு குறைக்கப்பட்ட திரண்ட இலதாக்கல் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது.

10. நிதி ஏற்பாடுகள்

தொடர்ச்சியான ஒரு (01) வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஊழியர்கள் சம்பந்தமாக பணிக்கொடை நிதி ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளன. ஆயினும், பல்கலைக்கழக முறையில் ஐந்து (05) வருட கால தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் ஓய்வு பெறும் போது பணிக்கொடைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு உரிமை கிடைக்கப்பெறும்.

11. வருமானங்களை இனங்காணுதல்

வருமானமானது அரசாங்க கொடைகள் உட்பட உள்நாட்டு தோற்றுவாய்கள் மூலம் பிறப்பிக்கப்பட்ட வருமானங்களைக் கொண்டிருக்கும். திரண்ட அடிப்படையில் முதலீட்டின் மீதான வட்டி கணக்கில் வைக்கப்படும்.

12. செலவுகளை இனங்காணுதல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பொது அறிக்கையிடல் படிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செலவுகள் ஆய்வு செய்யப்பட்டு செலவு தலைப்புகளுக்கு வகுப்பீடு செய்யப்பட்டுள்ளன.

13. வரி

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பங்குகளிலிருந்து கிடைக்கப் பெற்ற இலாபம் மற்றும் வருமானம் தவிர, இலாபமும் வருமானமும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

14. காசு ஓட்டக்கூற்று

"நேரடியற்ற முறைகள்" என்பதனைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்துறை கணக்கிடல் தரம் 2 (SLPSAS 2) இற்கு அமைவாக காசு ஓட்டக்கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவம்
நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கான குறிப்புகள்

குறிப்பு - 01		
வங்கியிலுள்ள பணம்	2018 (ரூபா)	2017 (ரூபா)
மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 156 838310	912,442.61	252,645.37
மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 246 838310	(50,000.00)	(902,000.00)
மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 336 838310	(67,535.00)	123,950.00
மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174200 226 838310	826,405.52	9,941,808.58
மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174200 136 838310	467,212.13	2,003,958.30
	2,088,525.26	**11,420,362.25**

குறிப்பு - 02		
பதவியணி கடன்களும் முற்பணமும்	2018 (ரூபா)	2017 (ரூபா)
இடர் கடன்	1,189,781.00	1,182,477.00
வாகன கடன்	2,900.00	30,900.00
விசேட முற்பணம்	500.00	500.00
விழா முற்பணம்	-	2,500.00
	1,193,181.00	**1,216,377.00**

குறிப்பு - 03		
மாணவர்களிடமிருந்து வரவேண்டியுள்ள வருமானம்	2018 (ரூபா)	2017 (ரூபா)
வரவேண்டிய பாடநெறி கட்டணம்	72,000.00	72,000.00
வரவேண்டிய மேலதிக வகுப்புக் கட்டணம் - TESL	3,586,425.00	3,558,275.00
வரவேண்டிய வகுப்புக் கட்டணம் - TLSC	2,152,100.00	674,400.00
